# எந்நூலுக்கும் இந்நூலே மூலம்

(ஆருவது அத்தியாயம்)

# ஆருதாரமும் அமிர்தமும்

(இரண்டாம் பதிப்பு)

ஞானவள்ளல்

**பரஞ்ஜோதி மஹான்**

அருளியது

பரிபூரண பரஞ்ஜோதியின்
உயர்ஞான சபையோரால்
வெளியிடப்பட்டது

சென்னை பி. என். அச்சகத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

உரிமைப் பதிப்பு. (Act XXI of 1860) ஆகஸ்ட் 1944.
(Copy Right Reserved)

## கவனிப்பு

ஞானமென்பது அறிவுக்கு உள்ளும் புறமும் நிறைந்தது. அதை அறிவோடு தேடுவோர் யாரோ அவர்களின் இருதயமே இப் பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான சபை.

T. S. தேவராஜன்,

காரியதரிசி.



ஞானவள்ளல்-பரஞ்ஜோதி மஹரான்

# ஆருதாரமும் அமிர்தமும்

## ஞானம் தேடும் அப்பியாசங்கள்

---

1. அடி முடி நடு சுழிமுனை திறந்து, சுழித்தெழுந்த செஞ்சுடரிற் சென்று, சும்மா இருக்கும் சுக அனுபவத்தால் :—

அணு அணுவாய், அணுவினுள் உள்ளுள்ள அறிவு, அறிவோடு அறிவாய், அறிந்து ஆனந்த அனுபவ மயமாய் ;

அணு அணுவாய், அணுவினுள் உள்ளுள்ள ஒளி, ஒளியோடு ஒளியாய், ஏக பர வெளியாய் ;

அணு அணுவாய், அணுவினுள் உள்ளுள்ள தொனி, தொனியோடு தொனியாய், ஏக நாத முழக்க மயமாய் ;

அணு அணுவாய், அணுவினுள் உள்ளுள்ள இருள், இருளோடு இருளாய், ஏக பரிபூரணமயமாய் ;

அணிவிலிருக்கும் நானும், அறிவிலிருக்கும் நானும், ஒளியிலிருக்கும் நானும், தொனியிலிருக்கும் நானும், இருளிலிருந்த நானே ; என் மயமானேன்.

## தன்னையறிய தவ அப்பியாசங்கள்

2. மெய்யுணர்வாளர்களே ! உலகில் பக்தராய், சித்தராய், முக்தரின் பதவிக்குரியவராயிருந்து, ஜீவன்முக்தி நிலையடைந்த முக்தி நிலை எதுவோ, அதுவே நீங்கள் அடைந்திருக்கும் மெய்யுணர்வாகும். இந்த மெய்யுணர்வைத் தேடி உலகில் அநேகர் பெரும் அப்பியாசங்கள் செய்து வருகின்றனர். அவைகளில் முதன்மையான அப்பியாசம், லம்பிகா யோகம் என்பது.

## லம்பிகா யோகம்

3. உலகில் எல்லாவற்றிற்கும் மேலான சமாதிநிலை உள் நாவு அப்பியாசமே தன்னுடைய நாவை நாளடைவில் நீட்டி நீட்டிப் பழக்கியும், கையைக்கொண்டு நாவை இழுத்தும், நாவின் அடிப்பாகத்தில் ஒட்டியுள்ள சதையை மெதுவுமெதுவாக அறுத்தும், ரணங்களை மருந்து கொண்டு, ஆற்றியும், சுமார் பத்து வருஷ பழக்கத்தில் நாவு மூக்குக்கு மேல் ஒரு அங்குலம் நீண்டபொழுது, தான் ஒரு இடத்தில் இருந்துகொண்டு, தன் கையைக்கொண்டாவது தன் சிஷ்யனைக்கொண்டாவது, தன் அண்ணுளத்தின் மேல் துவாரத்தில் நாவை மடக்கி நன்ருக உள்ளே பதித்து விட்டால், உடனே அவர்களுக்கு கண் காது முதலிய ஐப்புலன்கள் தம் ஆற்றல் இழந்து அறிவின் மெய் (சத்தியம்) மறதி ஏற்பட்டுவிடுகிறது. அதனல் எவ்வளவு காலம் இருந்தாலும் அவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. பல யுகங்கள் இருந்தாலும் அவர்களது சரீரம் அழியாது. வயதும் மேல் செல்வதில்லை. ஒரு யுகத்திற்கு முன் உள் நாவு அப்பியாசத்தில் இருந்த ஒருவரை இன்று எழுப்பி ஞலும், க்ஷணநேரத்திற்கு முன் நடந்த விஷயத்தைப் போன்று, அந்த யுகங்களில் நடந்த சமாச்சாரங்களையும், பாஷைகளையும் பேசுவார்கள். அவருடைய அறிவில் க்ஷணநேரத்தில் உலகம் மாறி அமைந்திருப்பதாகத் தோன்றும். அவர்கள் அவ்வப்பியாசத்தில் இருக்கப் போகுமுன் சாப்பிட்ட ஆகாரம் எதுவோ, அது இன்று வரை ஜீரணிக்காமலும், கெடாமலும் இருக்கிறது. அது வன்றி இவர்களுக்கு அமிர்தமோ, ஆகாரமோ உள்ளுக்குள் எங்கிருந்தும் கிடைப்பதில்லை. பசியும் வயதும் அறிவிற்கே உரியது. அறிவு மெய் (சத்தியம்) மறதியில் இருப்பதால்

வயதும், அறிவின் வளர்ச்சியும், பசி தாகமும் இவர்களுக்கு இல்லை. இச்சரீரங்களை மண்ணாலோ, மற்ற ஜீவஜந்துக்களாலோ அழித்துவிட முடியாது. ஆனால் நீராலோ, நெருப்பாலோ, பூகம்பத்தாலோ விபத்து ஏற்படலாம். அப்போது அவர்கள் மரணித்துவிடுகிறார்கள். மேலும் இவ்வப்பியாசங்கள் முன் காலத்தில் சாதாரண குடும்பங்களிலும் இருந்து வந்திருக்கிறது. இவ்வப்பியாசத்தில் இருந்தவர்களை மரணித்துவிட்டதாக நினைத்து, சுட்டுவிடுவது உண்டு. அதைத் தெரிந்த சில பெரியோர்கள், இவர்களை புதைத்துவிட உத்திரவு பிறப்பித்தார்கள். இவ்வப்பியாசத்தில் இருப்பவர்களுக்கு கண்ணில் உள்ள பாவை சுத்தமாக இருக்கும். ரோமமும் நகமும் வளர்ந்து இருக்கும். தேகத்தில் சூடு இருக்கும். இச்சரீரங்களைப் பார்த்தவுடன் மனித மக்களுக்கு பயம் தோன்றி, இவர்களை சித்தராகக் கருதி மூடிவிடுவார்கள். அதே இடத்தில் சமாதிகள் கட்டி வெகு ஆடம்பரங்கள் செய்வதுமுண்டு. அவ்விதம் நடப்பது அங்கு நாடிய ஜனங்களின் ஞாபகசக்தியே ஒழிய, அவர் சக்தியாகாது. இச்சமாதியில் இருப்பவர்களுக்கு நாவு எடுக்கப்படாமல் இருக்கும்வரை அவர்கள் உயிரோடு இருக்கிறார்கள். சில அசந்தர்ப்பங்களால் நாவு எடுபட்டுவிட்டால் அவர்களுக்கு வேண்டிய வசதி அங்கு இல்லாததாலும், அவர்களால் அந்த கட்டிடத்தை ஒன்றும் செய்ய முடியாததாலும், உயிர் போய்விடும். அவ்வப்பியாசங்களில் உள்ளவர்களை எழுப்பி, அவர் காலத்திலுள்ள விஷயங்களை தெரிந்து நூல் எழுதியும் இருக்கிறார்கள்.

## இவர்களை எழுப்பும் உபாயம்

**4.** சிலர் இந்த நாவு அப்பியாசம் செய்யப் போகும் போது ஜெபமாலையைப்போல் ஒரு நூல் கயிற்றை, மடித்த

நாவின் நடுவில் மாட்டி வாயின் வழியாக வெளியில் தொங்கவிட்டு, கையில் மாட்டிக்கொண்டிருப்பார்கள். இந்த நுட்பம் தெரிந்தவர்கள், சயிற்றை இழுத்து சில பாகங்களைத் தட்டிக்கொடுத்து அவர்களை எழுப்பிவிடலாம். கயிறு இல்லாதவர்களையும், இறுக்கி மூடியிருக்கும் அவர்கள் வாயை சில உபகருவிகளைக்கொண்டு மெதுவாகத் திறக்க வைத்து, நாவை அண்ணுளத்திலிருந்து தன் ஆள்காட்டி விரலைக்கொண்டு பலமாக இழுத்து எடுத்துவிடவேண்டும். அது வெகுகாலம் மடங்கி வன்மையாயிருப்பதால் அதை மெதுவுபடுத்திக்கொள்ள வேண்டும். கை கால் ஒரே முடக்கமாய் முடங்கியிருப்பதால் அவைகளை மெதுவு மெதுவாகத் தட்டி, அவைகளில் உணர்ச்சி வரும்படி செய்ய வேண்டும். அப்படி செய்து கொண்டிருப்பதால் அவருக்கு விழிப்பேற்பட்டு, மூச்சு போக்கு வரத்து உண்டாகிவிடும். இது மிக பழக்கத்திற்கு வருமுன் உலகத்திற்குத் தெரியாமலும், உலகத்திலுள்ளவர்களுக்கு நாம் பயப்படாமலும், அந்த ரூபகசச்தி நமக்கு ஏதோ செய்துவிடுமென்ற அனுவசிய பயமில்லாமலும் இருக்க வேண்டும். அது நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. இச்சமயங்களில் தகுந்த டாக்டர் ஒருவர் நம்முடன் இருப்பது நல்லது.

5. மற்ற எப்படிப்பட்ட யோக சமாதி நிலைகளிலும் சரீரத்தை பண் தின்றேவிடும். இந்த நிலைக்கு அநேகர் ஆசைப்படுகிறுர்கள். உள்நாவு அப்பியாசம் செய்யத் தெரியாதவர்களும் ஏதோ வாசியோகங்களால் தம் சரீரத்தை மறந்திருப்பது நல்லது என்று கருதுகிறுர்கள். அந்த கருத்து கூடாது. மறதி என்பது அறிவீனமே. அறிவீனம் அனுபவமொன்றுமில்லாதது. ஆகையால்

அறிவை அறியக்கூடிய தவமெதுவோ அதுவே ஞானம் அடையச் செய்யும். மற்ற நுட்பங்கள் நமது பேரறிவில் காணவும்.

6. இந்த அப்பியாசம் தேரைக்குரியது. தேரைக்கு வயது பல யுகங்களை குறிக்கலாம். அது தனக்கு ஆகாரம் கிடைக்காதபோது நாவின் அப்பியாசம் செய்துக் கொள்ளும். பாறைகளுக்குள் அகப்பட்ட தேரைகளும் இதே அப்பியாசத்தில்தான் இருந்து வருகின்றன. இவைகளின் கண் காதுகளுக்கு உணர்ச்சியிருப்பதால் ஆகாரம் கிடைக்கும்போது நாவை எடுத்து ஆகாரம் புசித்துக் கொள்ளும். கருநாகம், நல்லபாம்பு இவைகளுக்கும் இந்தப் பழக்கமுண்டு. ஆனால், இவ்வப்பியாசத்திலுள்ள மனிதனுக்கு இவ்வுணர்ச்சி இல்லவே இல்லை.

உலக நல்லடியார்களே !

7. அறிவைத் தேடி, அறிவை பாழ்படுத்துவதைவிட, அறிவைத் தேடி அறிவை அபிவிருத்தி செய்துகொள்வது மேலாகும். உதாரணம் :—உலகத்தைச் சுற்றிப் பார்க்க வரும் ஒருவன், காதையும் கண்ணையும் கெடுத்துக்கொண்டு சுற்றிப் பார்ப்பதில் பயன் என்ன? ஆகையால்தான் ஒரு சமயத்தில்,

காது கேட்க கைதாளம் போட
கண் பார்க்க வாய் சுவையறிய
மூக்கு வாசனையறிய உடல் உணர்ச்சியறிய
கவி நடிப்பின் திறமையை அறிவறிய
இது போன்றே முன் சம்பவங்கள் ஞாபகமறிய
இவையாவின் சுகக்தோடு உணர்வின் ஆனந்த
சுக பெருக்கே பேரானந்தம்.

என்று சொல்லியிருக்கிறேன்.

8. தன் அறிவின் பலஹீனத்தால் தற்கொலை செய்து கொள்ளும் ஒருவன், மறு சில பிறவிகளை எடுத்தாவது அதையுணர்ந்து சீக்கிரத்தில் முக்தியடைகிறான். ஆனால் உள்நாவு அப்பியாசத்தில் இருப்பவர் அறிவை அறிவதற்குப் பதிலாக, அறிவை தற்கொலை செய்துவிடுவதால், அநேக யுகங்கள் வீணாகச் சென்றுவிடுகின்றன. மற்ற எந்த அப்பியாசத்தில் இருந்தாலும் அறிவால் உணர்ந்து அறியக்கூடிய சக்தி யாரிடத்தில் இருக்கிறதோ அவர், அந்த அப்பியாசத்திலிருந்து தப்பித்துக்கொள்வதுடன் மேலான நிலையையும் கைப்பற்றிக்கொள்வார்.

9. இவர்களைப் போன்று சில மூச்சு அப்பியாசத்திலுள்ளவர்களுக்கும் கண் அப்பியாசத்திலுள்ளவர்களுக்கும் தம் சரீரந் திமிரேறி சுமார் மூன்று நாள் வரையிலும் தன் மறதி ஏற்பட்டிருக்கலாம். இவர்களை ஏதாவதொரு இடத்தில் ஊசியைக்கொண்டு குத்தினால் எழுப்பிவிடலாம். இவர்கள் மறதியாய் இருந்த காலம் இவர்கள் வயதில் கழிந்ததல்ல. இவர்களும் கொஞ்சம் தவறினால் மரணித்துவிடுவதுமுண்டு. ஆகையால் எந்த அப்பியாசத்திலும் அறிவினுடைய மறதியும், அறிவினுடைய அடிமையும் இருக்கவேகூடாது.

10. இந்த உள்நாவு அப்பியாசத்தின் நிலையில் இருப்பவர்களைக் கண்கொண்டு பார்த்தவர்கள், மூச்சுப் போக்குவரத்து இவர்களுக்கு இல்லாததால், இவர்கள் மூச்சைப் பிடித்து சரீரத்தை அழியாமல் வைத்திருப்பதாகக் கருதி, மூச்சு அப்பியாசம் செய்ய முற்பட்டார்கள்.

## வாசியோகம்

11. மூச்சை உந்தியிலிருந்து தப்பித்து மாத்திரை மாத்திரையாகக் கூட்டி, உடம்பின் உட்பாகங்களில்

அடக்கி பழக்கிவருவது உண்டு. இருதயத்திலிருந்தும் மூச்சையடக்கி நெற்றி வழியாய்ப் பல மந்திர நாமங்களைக் கொண்டு மூச்சை விடுவதும் வாங்குவதும் செய்துகொள் வதுமுண்டு. எதார்த்தமாகப் போய்க்கொண்டிருக்கிற மூச்சை எவ்வகையிலும் தடுத்துப் பழகக்கூடாது. எவ்வளவு தடுத்து அடைத்தானோ அவ்வளவுக்குப் பின் பலஹீனமடைந்து விடுகிறான்.

12. தன்னைத்தான் அறிந்துகொள்ள வேண்டி ஏற்படும் ஏக்கத்தின் வேகத்தால் தன் பலஹீனம் தனக்குத் தெரிவதில்லை. அது எதைப்போன்று என்றால், காதல்கொண்ட ஒரு காதலியையோ பொருளையோ தான் அடையும் வரையிலும் இடையிலுள்ள சிரமம் தனக்குத் தோன்றாதது போன்று. ஆனால் மெய்யுணர்வாளர்களே! மூச்சைப் பிடியாமலும், மூச்சைப்பற்றி யாதொன்றும் கவனிக்காமலும், ஏறுபடி எங்கேயிருந்து நீங்கள் முதலில் பழகினீர்களோ அவ்வழியில் சுமார் 5 நிமிஷம் பாவனை மட்டும் மனதில் நினைத்து மூச்சை போக்குவரத்து செய்து கொண்டீர்களானால் உணர்வு மிகமிக நன்றாக இருக்கும். முதல் உபதேச இடத்திலும் சுத்தி செய்த இடத்திலும் அப்படியே ஞாபகித்தால் உணர்வு அதிகரித்து, ரச மணியைப்போல் உருள்வது உங்களுக்குத் தெரியவரும். சுமார் 10 நிமிஷம் வரைக்கும் இதைச் செய்துவந்தால் போதும். அதுவும் வெகு நாளைக்கு ஒரு முறை போதும்.

மெய்யுணர்வாளர்களே.

13. 64 ஆசனங்கள் போட்டு ஸ்தூலத்தை அடக்கி ஒடுக்கிடாமல் ஆசனங்களெல்லாம் கடந்த சிம்மாசனத்தில் சிறப்பாய் இருக்கிறீர்கள்.

14. சும்மா இருப்பது சுகம் சுகமென்று சொல்லளவில் நின்றுவிடாமல் சும்மாயிருக்கும் இடமும் பொருளும் அறிந்து சுவாசத்தை அடக்காமலே சும்மா இருக்கத் தெரிந்தீர்கள்.

15. நான் என்ற ஆணவம்கொண்டு தவநாட்டமில்லாதிருந்துவிடாமல் நான் என்னும் ஆதியையும், அதன் பொருளையும் அறிந்து உணர்வாய்க்கொண்டு நான் என்ற இடத்தில் நாமாகி இருக்கிறீர்கள்.

16. இனி பிறந்து பிறந்து கண்டதெல்லாம் கடவுள் என்று கை எடுத்துக் கும்பிடாமல் முன் கும்பிட்ட பலனால் இறைவனும் தாமானீர்கள்.

17. தலை விதி, விதி என்று சொல்லி மதிமோசம் போகாமல் அவ்விதியை மதியால் வென்று, மாய்கையும் கண்டு, அறிவின் வெப்பத்தால் தன்னைத்தான் உணர்ந்தீர்கள்.

18. ஆசாபாசத்தால் நாம் அழுந்தியவர்கள் என்று எண்ணி அலங்கோலமாய் திரிந்திடாமல், ஆசாபாசமும் தன் அறிவுக்குள் அடங்கியதென்றே தன்னறிவால் அறிந்துகொண்டீர்கள்.

19. மலைமீது போய் இருந்தாலும் துப்புரவில்லாது போனால் அங்கும் ஈ, எறும்பு, கொசுக்கள் சேருவது போல், அறிவின் துப்புரவில்லாது போனால் பலவகையில் பாதிக்கப்படுகிறான். அறிந்தவன் இவ்வுலகத்துடனேயே ஒட்டி வாழ்ந்து முத்தியடையலாம்.

## படுக்கை

20. வலது கைப்பக்கம் திரும்பிப் படுத்துக்கொள்ள வேண்டியது. அப்போது உணர்வாய்த் தூங்கலாம்.

உணர்வு அதிகமாகி தலை பாரமாகி இருந்தாலும் சரி, சிறிது தூக்கத்தை விரும்பினாலும் சரி இடது கைப்பக்கம் திரும்பிப் படுத்துக்கொள்ள வேண்டியது. மல்லாந்து படுத்துக் கொண்டால் இடது கைமேல் வலதுகையும், வலது காலின் மேல் இடதுகாலும் வைத்துப் படுத்துத் தூங்கவேண்டியது. இப்படித் தூங்குவதில் மிக நன்மையுண்டு. சூக்குமலோக போக்குவரத்துக்கு ஏதுவாய் இருக்கும். உடம்பில் நோவு இருக்கும்போது மேற்கண்டபடி மல்லாந்து படுத்துக் கொண்டு சுழிமுனையை $\frac{1}{2}$ மணிநேரம் சரீரம் அசையாதபடி ஞாபகித்தால் அவ்வியாதி உடனே சுகமாகும்.

படுக்கைக்கு போகுமுன் ஒவ்வொருவரும் கால், கை, பற்கள் நன்றாகச் சுத்தம் செய்தே படுக்கவேண்டும்.

## ஆருதாரம்

**சுழிமுனையும் கடந்து நின்று சுழலும் சுகத்தில்**
**சுகிக்கும் சுக அனுபவத்தால் சொல்லும் சொல்.**

**21.** ஆருதாரம் காதுக்குக் கீழுள்ளதல்ல. நாபி, வயிறு, நெஞ்சு, தொண்டை, சுழிமுனைகளில் இந்த ஆருதாரத் திறைகளில்லை. இது பிடரிக் கண்ணுக்கு இரண்டரை அங்குல உயரத்திலும், நெற்றிக் கண்ணுக்கு இரண்டரை அங்குல உயரததிலும், இந்த இரண்டு இடங்களுக்கும் மத்தியிலுள்ள இடத்தில் உள்ளது. இதன் சுற்றளவு $20\frac{1}{2}$ அங்குலம் முதல் $25\frac{1}{2}$ அங்குலம் வரைக்கும் ஒரு ஆமை முதுகைப்போன்று $8\frac{1}{2}$ அங்குல நீளம் $5\frac{1}{2}$ அங்குல அகலமுள்ளது. ஆறு அடுக்கு சேர்ந்த மெல்லிய ஜவ்வின் கனம், ஒரு ரோஜா புஷ்பத்தின் இதழுக்கும் மிக மிக லேசானதாகவும் மிக மிக மிருதுவாகவும் இருக்கிறது.

பிறக்கும் குழந்தைகளுக்குத் திறை ஒன்றுதான் உண்டு. மூன்று வயதிற்குள் இரண்டாவது திறையும், ஏழு வயதிற்குள் மூன்ருவது திறையும், பத்து வயதிற்குள் நான்காவது திறையும், பதிஞன்கு வயதிற்குள் ஐந்தாவது திறையும், பதினெட்டு வயதிற்குள் ஆருவது திறையும் உற்பத்தியாகி விடுகின்றன. சில குழந்தைகளுக்கு சிறிது முன் பின்ஞகவும் உற்பத்தியாவதும் உண்டு. 18, 21, 25 வயதிற்குள் இத்திறைகளுக்கு திடமும் வலுவும் ஏற்பட்டு விடுகிறது. பின் அறிவின் தெளிவும் படிப்பின் திறமையும் ஆராய்ச்சியின் நுட்பங்களுமிருந்தால், இத் திறைகளின் மேல் மாசு படராமல் இருக்கும். ஒரு சிறிய பொருளேப் பெரிதாகக் காட்டும் பூதக் கண்ணுடிபோன்று அறிவின் திறமையை விளக்கிக் காட்ட இத்திறைகளின் பிரகாசமே பிரயோசனப்படுகிறது.

அறிவின் மடமையே அறிவின் அடிமையாகும்.

22. அறிவின் அடிமையிருந்தால், அறிவின் பிரகாசம் குறைவுபடுவது மன்றி, மனச் சலனமும், துணிவிலும் ஊக்கத்திலும் குறைவு ஏற்படும். ஆராய்ச்சிக்கேற்றவாறும் நல்லறிவுக்குத் தக்கவாறும் இத்திறையினுடைய வெப்பு பிரகாகிக்கின்றன.

23. தன்னேத்தான் அறிந்துகொள்ள வெண்டுமென்ற உண்மை விருப்பமுடையோர்க்கு ரம்பத்தின் நெளிவு பற்கள்போல் மண்டை ஓடு இரண்டின் இணேப்பில் உள் இடைநடுவே இருக்கும் மெல்லிய ரோமத்திலும் சிறு ரோம பாதையாய் (இதை இப்படியும் சொல்லலாம் நெருப்பாறு மயிர்ப்பாலம்-வழியாய்) குருவின் நுட்பமும் உடம்பின் பருவமும் கருவும் நினேவும் அறிவும் சேர்ந்து

சென்று சுழிமுனையான நெற்றிக் கண் திறந்தால்,* இத் திறைகளுக்குள் புகக்கூடிய சக்தியும் புகுந்து நின்று ஆராய்வதற்குரிய வல்லமையும் உண்டாகிறது. அச்சிறு ரோமபாதை கொழுப்பால் அடைபட்டிருக்கிறது. இது குருவின் விசுவாசக் கனலால், இளகிவிடுகிறது.

24. அதனுள் போய் விளையும் கருவியின் விளைவுக்கே உணர்வு என்று பெயர். அதுவே இச்சபை மெய்யுணர் வாளர்களின் தவ விளைவாகும். இவ்வுணர்வின் சக்தி அங்கு உறுத்தும் அழுத்தத்தால், திறைகளில் உள்ளும் மேலும் உள்ள மாசுகள் நீங்கிப் பிரகாசிப்பது தன் அறிவிற்கு தெரியவரும். ஒரு கண்ணாடியில் பூசிய ரசம் சிறிது சிறிதளவாக அழிந்து போவது போன்று நாளடைவில் மாசுகள் நீங்கி திறைகளின் பிரகாசம் தெளிவடைவதோடு நல்லறிவணுக்களோடு பிடரிக் கண்ணி லிருக்கும் முன்பின் ஞாபிகித்த ஞாபகங்களும் அனுபவங் களுமான பொக்கிஷ அணுக்கள் வந்து திறைகளில் கலக்க அறிவிற்குப் பெரும் இன்பமளித்து எல்லா விபரங்களும் முடிவுகளும் தெரியவருகிறது. இது மெய்யுணர்வின் பெரும் பாக்கியமாகும்.

25. உணர்வின் உருவைத் திடப்படுத்திச் சொல்வ தென்றால், பெருமழைத் துளியில் ஒரு துளிபோன்றும் பழையகாலத்து மூக்குப்புல்லாக்கில் தொங்கும் முத்தைப்

---

* இது இரண்டு கண்களின் புருவ இடை நடுவே மூக்கின் மேல் முனையில் சிறு ஊசித்துவாரத்தில் 10-ல் ஒரு பாக அணுவிலும் மிகச் சிறிதாய் உள்ளது. இது லேசான ஜவ்வினால் மூடப்பட்டிருக்கிறது. இது உலகங்களுக்கெல்லாம் சிம்மாசனமாகவும் முத்திக்கு முதல் வாசலாகவும் இருக்கிறது. பிராணபாம மூச்சு அப்பியாசங்களில் இதைத் திறந்துவிடமுடியாது.

போன்றும் ஒரு பெரிய மிளகு பருமனுள்ள பாதரசம் போன்றும் இந்த உணர்வின் சக்தியிருக்கிறது.

மூலாதாரத்தில் விழித்தெழுந்த பொருள்
ஆராதாரத்தில் அழுத்தும் அழுத்தத்தால்
ஆனந்த அறிவின் என் அனுபோகச் சொல்.

26 இச்சபையில் சேர்த்து அநுபவிக்கும் மெய்யுணர்வாளர்களுக்கு இந்த உணர்வின் சக்தி அதிகமானால், ஒரு உருக்கிருப்பைத் தட்டினால், ஓசையுடன் அதிர்ச்சி ஒன்று கிளம்புவது போன்று உணர்வில் ஓசையின்றி அதிர்ச்சியில் நல்ல இன்பமும் சுகமும் சுத்தி செய்த இடத்திலும் முகம் நெற்றி மிக உற்சாகத்தோற்றமாய் இருக்கும். இருட்டுக் காலங்களில் சிறு மழை பெய்துகொண்டிருக்கும்போது தூரத்தில் தெரியும் விளக்கைச் சுற்றியுள்ள சுடரைப் போன்று அறிவின் உணர்ச்சிக்கு நெற்றியில் சுடரும் இருக்கும்.

27. 25வயதிற்கு மேற்பட்ட ஒருமனிதன் இச்சபையில் சேர்ந்து இந்த உணர்வை அடைந்தானானால் 21 நாட்களில் சுழிமுனையைத் திறந்து பத்து மாதகாலத்தில் ஆறு திறைகளில் ஒரு திறையை விலக்கிப் பார்க்கக்கூடிய வல்லமை ஏற்பட்டுவிடுகிறது. தன் திறமையின் அறிவின் நுட்பத்தால், ஐந்து வருஷங்களுக்குள் எல்லாத் திறைகளையும் அறியக்கூடிய சக்தி ஏற்பட்டுவிடுறது. சிலருக்குப் பத்து வருஷ காலமும் செல்லலாம். சுமார் ஐந்து அல்லது பத்து வருஷங்களுக் குள்ளாக தங்களது வயதைக் கூட்டவும் குறைக்கவும் தனி சக்தி உண்டாகிவிடும்.

28. இந்தத் திறை முதுகெலும்புள்ள சில ஜீவ ஜெந்துக்களுக்கு ஒன்றும், சில மிருகங்களுக்கு இரண்டு முதல்

மூன்றும், மானிடராய்ப் பிறந்த அலிக்கு நான்கும், பெண்ணுக்கு ஐந்தும், இருபத்தோரு வயதுள்ள மனிதனுக்கு ஆறும் இருக்கிறது. இத்திறைக்கு ஆதரவாய் உள்ளது மூளையும் அத்த மூளையின் மத்தியிலுள்ள தித்திப்பாகிய அமிர்தமும். இதற்குப் பாதுகாப்பு மண்டை ஓடு.

29 ஆறுதாரத் திறை ஆறும் சேர்ந்தபின்தான் அவனவன் செய்த குற்றத்திற்கு அவன் குறையுடையவனுக இருக்கிறுன். அதற்குமுன் செய்த செய்கைக்கெல்லாம் முன்பின் பிறவிக்குட்பட்டதல்ல. வைராக்கியமும் ரோஷமும் இருந்தால், பொறுமையும் அறிவும் தானே உண்டாகிவிடும்.

30. உலக மக்களே! நீங்கள் உத்தமர்களாக வேண்டுமென்ருல் பல ஜெபங்களை ஜெபிக்காதீர்கள். உங்கள் பெயர்களையே மந்திரமாக ஜெபித்துக் கொள்ளுங்கள்'

31. சிரசாசனம் செய்வதால், அறிவின் அபிவிருத்திக்குத் தடையும் மரண உபாதை அதிகமும் ஏற்படுவதால், இவ் வாசனம் செய்யாதீர்கள்.

32. உங்களின் அன்புக்குறிய மனைவியிடமும் தன் இனத்தார்களுடனும் அன்பாய் வாழ்வதுடன் அறிவை ஆராய்ந்தறிந்து பெருக்கிக்கொள்ள வேண்டும். விரிவாய்ப் பேசுவதைக் காட்டிலும் சுருக்கிச் சுருக்கமானச் சொல் லொன்ருல் விளக்குங்கள். நீங்கள் வீணுக ஆவியைப் போக்காமல் கவனத்தோடு கண், காது எச் செயலும் உணர்வில் இருந்தே செய்யுங்கள். அது பெரும் நன்மை யாகவே முடியும்.

33. வெளியில் வரும் அசரீரிகளையெல்லாம் அந்தந்த சமயத்திற்கேற்றவாறு உபயோகித்துக் கொள்ளுங்கள்.

அவ்வசரீரி எல்லாம் குரு, ஈசன் சொல்லாகும். இன்னும் ஆராய்ந்து பார்த்தால் உங்களுடைய சொல்லே அது.

34. நல்லதைப் பார்த்து அறிவை ஆனந்தியுங்கள். கெட்டதைப் பார்த்து மனதைப் பயப்படுத்துங்கள். உங்களின் அனுபவ அறிவோடு பிறவியை முடிப்பதற்கும் அறிவின் பெருந்தன்மைக்கும் இவைகள் கூர்மையான ஆயுத சாதனங்களாகும்.

35. பிறருடைய தயவை நாடவோ, எழிமையான வார்த்தைகள் பேசவோ வேண்டாம். நீங்கள் நல்ல சத்தான ஆகாரங்கள் சாப்பிடுவதினாலும், உயர்ந்த சுத்தமான உடைகள் உடுத்துவதினாலும், நல்ல தன்மையும், ஒழுக்கமும், உண்டாவதுடன் பொருள் செலவும் மிகச் சுருக்கமாகும்.

## அமிர்தம்

36. இந்த அமிர்தம் மூளையின் நடுப்பாகத்தில் உள்ளது. இதன் அளவு அரைவீசம் ($\frac{1}{32}$) படி முதல் வீசம் ($\frac{1}{16}$) படி வரையில் உள்ளது. இது எல்லோருடைய மூளையிலுமுண்டு. இது மிகத் தெளிவாய் உள்ளதும், தித்திப்பில் இணையற்றதுமாயிருக்கிறது. இதனை கருநெல்லி, வெண்சாரை என்றும் சொல்லுவர் சிலர். இதை சில அப்பியாசிகள் வாய் மூடி மௌனமாய் நாவை அண்ணாளத்தில் ஒட்டியிருந்தால் சிலகால அப்பியாசத்திற்குப்பின் இந்த அமிர்தம் பாளையில் கள் வடிவதுபோல் அண்ணாளத்தின் மேல் பாகத்திலிருந்து ஒரு சிறு அருகம்புல்லின் நுனியில் உள்ள பனித்துளியிலும் மிக மிகச் சிறிதளவு சொட்டுவதுபோல் இவர்கள் நாவில் சொட்டும். அச்சொட்டு வாயில் பட்டவுடன் வாயின் எச்சிலெல்லாம் தித்திப்பாக மாறுகிறது.

அவர்கள் தாங்கள் செய்யும் அப்பியாசத்தின் பலன் அது தான் என்று கருதி, மேலும் மேலும் அதைப் பற்றிப்பற்றி நாவால் இழுத்துக் கொள்வார்கள். இதன்மேலுள்ள பற்றுதலின் ஏக்கத்தால் இவர்கள் சிறிது காலம் பசி யில்லாமலும் இருக்கலாம்.

37. இந்த அமிர்தம் இருதயத்தில் சுழலும் இரத் தத்தின் சுத்தத்தால் இருதயத்திலிருந்து சுமார் 16 அங்கு லத்திற்கு மேல் தித்திப்பாய் மூளையில் போய் சேருகிறது. இதனுடைய தெளிவினாலும், அளவின் மிகுதியாலும் மூளை சுத்தமாவதுடன் ஆறுதாரத் திரைகளின் பிரகாசமும் அதிகரிக்கின்றது. வெகு சிரமத்தில் மூளையில் போய்ச் சேர்ந்த இந்தப் பொருளை மறுபடியும் கீழே பற்றி இழுப்பதால் இரத்தம் கெட்டு நகங்கள் கறுத்து தேகத்தில் சோர்வும், மூளையில் பலக்குறைவும், புத்தி சுவாதீன மின்மையும், ஆயுள் குறைவும் உண்டாவது சகஜம். இதைப்பற்றி பல நூல்களிலும் பெருமைபடப் போற்றி யிருக்கிறார்கள். அது அவர்களின் அனுபோகம் போதாத தால்தான். சில குருக்கள் தன் எச்சிலை தன் சிஷ்யனுக்குக் கொடுத்து அமிர்த தீட்சை செய்வதாக சொல்வதுமுண்டு. அறிவாளியான குருவும், அறிவையறியப் போகும் சிஷ்ய னும் இதைச் செய்வதற்கோ ஆமோதிக்கவோ மாட்டார் கள். மற்றொருவகை, குரு சாப்பிட்ட எச்சில் பாலை சிஷ் யர்களுக்குக் கொடுத்து ஞானப்பால் தீட்சை செய்வதாக வும் சொல்வர். இதுகள் எல்லாம் அறிவீனச் செயலே யாகும், தன் பிந்து சிரசிற்கேறி ஊசித்துவாரம் வழியாக அமிர்தம் கிடைக்கிறதென்பதும் ஒரு சிலர் அபிப்பிராயம். பிந்து சிரசில் ஏறினால் அது அமிர்தமாக மாறுவதில்லை. அது ரசமணியாகத் திரளும். இதன் விபரம் நமது பரஞ்ஜோதி யில் பார்க்க.

38. இதற்காக வேண்டித்தான், "அருளோடு நிறைந்ததேது, அதுவே உடலோடு நிறைந்த கரு; கருவோடு நிறைந்ததேது, அதுவே உடலோடு நிறைந்த நம்முள்ளுள்ள நினைவு" என்று சொல்லி யிருக்கிறேன். இதையறியாத யாவரும் இதையறிய வேண்டியதற்காக மேற்கண்ட அப்பியாசங்கள் செய்து வருகின்றனர்.

## காய கற்பம்

39. இதைப்பற்றி சுருக்கமாகச் சொல்லுகிறேன். தன் சிறுநீர், விந்து, மலம், பெண்களுடைய நாதம் இவற்றை உட்கொள்ளுவது சிலரின் கொள்கையாக இருக்கிறது. இவர்கள் சரீரத்தை நெடு நாள் வைத்திருக்கவேண்டும் என்ற ஆசையை, ஞானமடைய வேண்டுமென்ற எண்ணமுமுடையவர்கள் என்பர். இவர்கள் அனுபவ அறிவுத் துரோகிகளாவார்கள். இவ்வறிவு உலகில் நாய்கூட இவைகளைத் தின்னுது. இதைச் செய்துகொண்டு இரு ்கிறவர்கள் இனிமேலாவது இவ்வப்பியாசத்தை அறவே விட்டுவிட்டால் பெரும் பாக்கியசாலிகளாவார்கள். இதுவுமன்றி, காயகற்ப உப்புகள் செய்து சாப்பிட்டபோதிலும் சரீரம் நிலைப்பதில்லை. ஆகையால்,

40. அறிந்தறிந்து விடுவது ஞானம்
அறிந்தறிந்து கொள்வது ஞானம்
அறிந்தறிந்து அறிவது ஞானம்
அறிந்தறிந்து தெளிவது ஞானம்
அறிவதெங்கே? அறிந்ததெங்கே?
ஆக்கினையும் கடந்து ஆருதாரத்தில் அழுத்தும்
உணர்வின் கண்ணுல்.

41. மெய்யுணர்வாளர்களே! உட்பொருளை உணர்ந்து உயர் ஞானதீட்சை பெற்றீர்கள். உள்ளம் கடந்து உச்சி மலைமீது உணர்வையடைந்தீர்கள். உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து குறைவில்லா இவ்வுடம்பை ஒருவர் தய்வுக்கு இணையாக்காது ஏகபரனை இணைவீர்கள்.

## சோம வட்டம்

42. சோம வட்டத்தின் அளவு காலை உதிக்கும் சூரியன் அளவே. அதன் தோற்றமும் காலை சூரியனைப் போன்றதே. இது ஒவ்வொரு மனிதனுடைய இருபுஜ அளவு வட்டமானது. இந்த வட்டத்தின் நடுவே ரோமம் போன்று சிறு நெளிவான கோடுகள் மேல்கீழாய் இருக்கும். இதைப் பகல் காலங்களில் தெளிவாய்க் காணலாம். பக்தருக்கும் இது தெரிவதுண்டு. இதுவு மன்றி, ஒரு அங்குல சுற்றளவில் பல வட்டங்கள் பல வர்ணங்களால் தெரியவரும். இந்த வட்டங்கள் கண் பட்டை ரோமங்களின் சலனத்தாலும், அதில் கொஞ்சம் நீர்பட்டு இருந்தாலும் தெரியவரும். இது சோம வட்ட மாகாது. மேல் கண்ட சோம வட்டம் சுமார் 8 கெஜம் முதல் $\frac{1}{2}$ பர்லாங்கு வரையிலும் நெற்றிக் கண்ணுக்கு நேராய் பரவச சக்தியோடு தெரியவரும். இந்த வட்டம் ஒரு முழ அளவில் முன் தோன்றினால் தன் குரு ரூபமோ, தன் ரூபமோ, தன் மன உருக்க ரூபம் எதுவோ, அது அதில் தெரியவரலாம். அப்படி உருவங்கள் தெரிய வருவது தன் சிறந்த பக்தியின் ஓர்மையே. அறிவின் அபிவிருத்திக்குப்பின் அது தோன்ருது. தோன்றினாலும் அது ஏற்றுக்கொள்ளப்படாது. இது நெற்றிக்கண் ஞாபக சக்தியால் உண்டாகுகிறது. அந்த வட்டத்திற்கும் நெற்றிக்கும் ஒருவித சிறு இழுவை உண்டாக்கும்.

நெற்றியை அசைத்தால் அவ்வட்டமும் அசையும், நாம் செல்லச்செல்ல அதுவும் முன்னேறி போய்க்கொண்டிருக்கும். அதனால் தவம் அதிகரிக்கும். அருள் மிகுதியாக முகத்தில் இருக்கும். இது தன் சக்தியே அல்லாது வேறொரு சக்தி என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. பிடரிக்கண் கூச்சம் ஏற்பட்டவுடன் அவ்விடம் ஏற்படும் கனலின் பிரதிபிம்பமே சோம வட்டமாகும். நெற்றிக்கு நேராய்த் தெரியும். சோம வட்டம் தண்ணீரில் பட்டு பிரதிபலிக்கும் வெளிச்சம் போன்றது. அவரவர் சக்திக்குத் தக்கவாறு அதிகரித்துக் கொள்ளலாம். சோம வட்டத்தில் சில ரூபங்கள் தெரிந்து நம்மோடு சில சமயங்களில் பேசுவதும் பார்க்கலாம். இதைத் தேவ தரிசனமென்று சொல்லிக்கொள்வர். அதன்று, அவரவருடைய ஞாபக சக்தியே. தான் ராகமாக பாடிக்கொண்டிருக்கும் சமயத்திலும், இராகரீங்காரம் கிரகித்துக்கொண்டிருக்கும் சமயத்திலும், அதிக பசியாய்க் களைத்திருக்கும் சமயத்திலும், தவமதிகரிக்கும் சமயத்திலும் இந்த வட்டம் தெளிவாய்த் தெரியவரும்.

43. இன்னொரு வகை :-சாயா தெரிசனம். சூரியனை கூர்ந்து பார்த்து தியானித்தும் மற்ற சில வகைகளால் தன் ரூபத்தை சுமார் $\frac{1}{4}$ பனை உயரத்தில் வெள்ளை ரூபமாக பார்ப்பதும் உண்டு. அதுவும் தன்னுடைய அப்பியாசத் திறமையே. சந்திர வெளிச்சத்திலும் சூரிய வெளிச்சத்திலும் தன் நிழலைக்கூர்ந்து பார்த்துவிட்டு தனக்குமேல் ஆகாயத்தில் பார்த்தால் தன் ரூபம் தெரிவதும் உண்டு. இதுவும் தன்னுடைய அப்பியாசத்தின் திறமையே.

44. இன்னொரு வகை :—கண்களின் புருவ கடைசியில் விரலை வைத்து அழுத்தினால் உடனே அந்த கண்ணுக்குள் உள்ள கருவிழியின் பிரதிபிம்பம் மறு கண்

பக்கத்தில் பளீரென்று செஞ்சுடராய்த் தெரிவதும் உண்டு. அது அந்த நரம்பின் ரத்த சக்தியே. சிலர் அழுத்தி அழுத்தி அழுத்தி சோம வட்டத்தைப் பார்ப்பதாகக் கருதிக் கண்களைக் கெடுத்தும் கொண்டார்கள். அப்படி செய்வது அறவே கூடாது. கண்கள் இரண்டையும் பெரு விரல்களால் நன்ருக இறுக்கி அழுத்தி ஆள்காட்டி விரல்களால் இரு காதுகளையும் அடைத்து, நடுவிரலால் நெற்றியின் நடுப்பாக நரம்புகளை அழுத்தியும், மோதிர விரலால் மூக்குத் துவாரங்கள் இரண்டையும் அடைத்து, சுண்டு விரலால் வாயில் அழுத்திப் பொத்திக் கொண்டால் திடீரென்று ஒரு வெளிச்சம் தெரிவதுண்டு. அதை ஜோதி என்றும், ஜோதியைக் காண்பிப்பதாகவும், கண்டுவிட்டதாகவும் கருதுவார்கள். அதனுல் கண்களுக்கும் மற்ற அவயவங்களுக்கும் திடீரென்று சில அபாயங்கள் ஏற்பட்டு விடுவதுண்டு. அறிவுடையவர்கள் கண்டு தெளிந்து கொள்ளுங்கள்.

இரவு பதினேரு மணி நிலா வெளிச்சத்தில் நான் சிறுநீர் செய்து எழுந்திருக்கும்போது எதிரில் 10 கெஜ தூரத்தில் பெரும் பனை மரத்தைப்போல் சிறு தொலை உயரத்தில் ஜக ஜோதியான ஜோதி சுமார் ஐந்து நிமிஷம் வரையில் தெரிந்தது.

என் சகஜம் நான் ஒன்றைக் கண்டால் அதன் காரண காரியம் முடிவு காணும் வரையிலும் சமாதானம் அடையேன். அதுவரையில் என் உடம்பு அதிக சூடாய் இருப்பது வழக்கம். ஆகவே அந்த இடத்திலேயே அந்நேரத்திலேயே ஆராய்ந்தபோது எனக்கு வலது பக்கத்தில் அரை பர்லாங்கு தூரத்தில் ஒரு மனை மரமே இருந்தது. எனக்கு கிழக்கில் அவ்வளவு தொலைவில் உள்ள மரம் வடக்கே என் எதிரில் ஜோதியாய் ஏன் தெரியவேண்டும்

என்று ஆராய்ந்தபோது நானே மற்ற ஒரு எவ்வித சிந்தனையுமில்லாது ஒரே நல் சிந்தனையோடு கண் இமையாது இருந்து சிறுநீர் செய்ததால் நிலா வெளிச்சத்தில் இருக்கும் அம்மரத்தின் ரூபம் கண்ணில் பட்டு அந்த ரூபத்தின் பிரிதி பிம்பம் என் எதிர் முகமாய் ஜோதியாய் ஜொலித்து காட்டியது என்று அறிந்தேன்.

நான் அதை ஆராய்ந்து முடிவு கட்டாமல் பனைமர உயரப் பருமானத்தில் ஒளி தெரிந்து கண்டேன் என்று சொன்னேனானால் அது பொய் ஆகுமோ, ஆகவே ஆகாது.

ஆராயாது சொல்லி இருக்கும் சொல்லுக்கும் நூல்களுக்கும் இது ஒரு பெரும் அத்தாட்சியாகி அதையே ஸ்திரமாய் திடப்படுத்தி விடுவதுமாகும். அதுவுமன்றி இது வரையில் அவா கொண்ட பக்த யோகி மற்றோர்களுக்கும் துரிதவேக பிரயாசையோடு சிரத்தை கொடுப்பதுமாகும். அப்படி முற்பட்டோருக்கெல்லாம் இவ்விதமாக காணாது போனால் தன் பிரயாசை தளர்ச்சியடைவதுமன்றி, அது நமக்குக் கிட்டாதுபோல் என்று முடிவு கட்டிக் கொள்வர். அப்படியே அநேக சந்தர்ப்பங்களால் அம்மாதிரியான ஜோதியை கண்டு விட்டாலோ அதுவால் ஏற்படும் பிரயோஜனம்தான் என்ன? ஆகவே ஆராய்ச்சியில்லா சொல்லும், பிரசார நூல்களும் பல ஆயிர மக்களை அறிவின் முற்போக்குக்கு தடையாய் பாதித்தே தீருகின்றது. ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொருவருக்கும் ஆராய்ச்சி அவசியமே.

## சபை நிபந்தனைகள்

45. (1) எவ்வித புகை சம்பந்தமாய் உள்ள போதைகளையும், கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களையும் அறவே நீக்கிவிட வேண்டும், அதாவது இரத்தத்தைக்

கெடுப்பதும் அறிவை மயக்குவதுமான எவற்றையும் அறவே தள்ளி விடவேண்டும் என்பதேயாகும்.

(2) அன்னிய ஸ்திரீகள்மேல் இச்சை கொள்ளா திருத்தல், தன் மனைவியோடு அன்புடன் இருத்தல்.

(3) பிறரையோ, பிறமதங்களையோ குறைசொல்லி இகழாதிருப்பதுடன் எந்தக்கட்சி சார்பிலும் கலக்கா திருத்தல்.

(4) வஸ்திரங்களால் சரீரத்தை பெரும்பாலும் மறைத்திருப்பதுடன் தன் குறையை அடிக்கடி தானே உணருதல்.

(5) "எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டல், தான் எவ்வுயிர்களையும் ஹிம்ஸியாதிருத்தல்." ஸ்தூலங்களை வாகனமாகக்கொண்டு அறிவு அனுபவித்து உயர்ந்து கொண்டு வருகிறது. எல்லாவற்றிற்கும் மேற்பட்டது மனிதநிலை. அம்மனித மக்களின் மனது நோகும்படி செய்வது பெரும் ஹிம்சையாகும்.

(6) "தன்னுடைய மதத்திலேயே இருந்து முக்தி பெருதல்." சமயத்தின் ஒத்தாசை, அறிவின் அபிவிருத்தி வரை. அறிவின் அபிவிருத்திக்குப்பின் தன் சுய திட சித்தமே தன் மதமாகும். சுய அறிவைக்கொண்டு ஆராயும் போது சிறு பிராயத்தைப் பெரும் பிராயமாக்குவதற்காக தன்னறிவே சமயத்தைச் சிருஷ்டித்ததாக தனக்குத் தெரியவரும்.

(7) "எவ்வித கரரணத்தை முன்னிட்டும், எண்ணெய் தேய்த்துக்கோள்வதோ, எண்ணெய் ஸ்நானம் செய்து கோள்வதோ அறவே கூடாது." வீரம், பூரம் சில பாஷாணம் உடம்பில் பட்டால் ஒன்றுமாவதில்லை. உள்ளுக்குள் சென்றால் கோளாறு ஏற்பட்டுவிடும். அதைப் போல் எண்ணெய் உள்ளுக்குள் சென்றால் ஒன்றும் செய்யாது.

மகாராசா சரபோசி ... சாலை

திரேகத்தில் பட்டால் விந்துவை நஷ்டப்படுத்துகிறது. இச்சபையோர்களுக்கு முக்கியமானது விந்து.

(8) தான் தவம் செய்துகொண்டிருப்பதாக பிறர் அறியாவண்ணம் இருப்பதுடன், சாபம் கொடுப்பதோ, சித்து விளையாடுவதோ கூடாது.

(9) "குருபரன் கொடுத்த உபதேசத்தை பிறருக்கு உபதேசியாதிருத்தல்." சிறு உபகாரத்தால் பெரும் அபகாரமே ஏற்படும்.

(10) பத்து வருடத்திற்குள் ஜோதியுடன் தான் ஐக்கியமாகாதிருத்தல்.

## பஞ்சவர்ணம்

46. இது பஞ்சவர்ணம் என்று பேர் நாமம் கொண்ட போதிலும் இதில் அனேக வர்ணங்கள் அடங்கியுள்ளது. இந்த வர்ணம் தெரிவது நெற்றிக்கண்ணுக்குள், அங்கு தோன்றும் பலவர்ண அரூபாரூப தோற்றங்கள் தான் இன்று செய்து முடித்ததும் முடிக்கப்போகும் வர்ண நிறங்களின் அழகும் தோற்றமுமாகும். நொடிக்கு நொடி மாறி மிகமிக அழகுடையதாக தோன்றி நிமிஷம் நின்று மாறும் பச்சை, பவளம், நீலம் மரகதம், மாணிக்கம் முத்து, நிறம் போன்று தோன்றும். இந்த நிறம் இருதயத்திலும் மூளையிலும் மிக அழகாக உண்டு. இரத்தத்தின் சுத்த சுழலுக்குத் தக்கவாறும் மனதின் சுத்தத்திற்குத் தக்கவாறும் நெற்றிக்குள் பல பிரகாசத்துடன் நிறங்கள் தோன்றுவதுண்டு. இதுவும் நம் ஏக்கத்தின் வேக அழகே.

47. இந்த வர்ணம் முதல் முதலில் எங்கிருந்து உற்பத்தியாகியது என்பதை "ஆதியும் உலக இணைப்பும்" என்ற புத்தகத்தில் ஆதி உற்பத்தி என்ற அத்தியாயத்தில் பார்க்கவும்.

## கபம்

48. உடம்பிலுள்ள இரத்தமே எச்சிலாக மாறி சத்தான விந்துவாகிறது. ஆனல் கப குற்றம் நீங்கினல் மரண பயம் நீங்குவதாக நினைத்து காலையும் மாலையும் தன் எச்சிலை கைகளாலோ, மற்ற கருவிகளாலோ வெளியேற்றுவது சிலரது சகஜம். அப்படி எச்சில் எடுப்பதால் நுரையீரலுக்கும், மற்ற அவயவங்களுக்கும் பலஹீனம் ஏற்பட்டு பல வியாதிகள் ஏற்படலாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் தான் கஷ்டப்பட்டு சிரமத்தோடு கபம் வெளியேற்றக் கூடாது. உடம்பில் உள்ள சத்தில் எச்சிலும் மிக சத்தானது.

49. மெய்யுணர்வாளர்களே! எல்லாவற்றையும் கண்டிப்பதாகவும், எல்லா அப்பிபாசங்களையும் எடுத்துக் காட்டுவதாகவும் நினைக்கக்கூடாது. உலகில் ஓரறிவிலிருந்து தான் ஆரறிவு மக்களாய் உயர்ந்து உலக நிர்வாகம் நடந்து வருகிறது. அதைப்போல்தான் பல யோகங்களின் வழியில் படிப்படிப்பாய் உயர்ந்து ஞான முடிவிற்கு நாம் வந்திருக்கின்ருேம். அநேக குருக்களின் பெரும் விசுவாச நன்றியின் முடிவே இச்சபையின் திருக்கூட்டத்தின் ஒற்றுமையும் அறிவின் பெருக்கமுமான தவ முடிவு.

50. ஆகையால் அறிந்து சொல்வதை ஆமோதித்து, அறிவில் தெரிந்து, ஆராய்ந்து தேறுவீர்களாக. தேறுவீர்கள்,

## ஆலயம்

51. எல்லா ஆலயத்திற்கும் மேலான ஆலயம் உடம்பே. உடம்பை எந்த வகையிலும் சுத்தமாக வைத்துக்கொள்ள முற்பட்டால், மற்ற எல்லா ஆலயங்களும் சுத்தமாகி விடும். அறிவின் அபிவிருத்திக்காகவே ஏற்பட்

டது ஆலயங்கள். அவ் ஆலயங்கள் இப்போது ஏற்பட்டிருக்கும் அறிவின் மேல் நிலையை அடியோடு அழித்துப் பாழாக்கும் தன்மைக்கு உபயோகப் படுத்திக் கொண்டாடப் படாமல், எல்லாப் பொது ஆலயங்களும் மிக சுத்தமாய், எவ்வித உருவச் சின்னங்களும் இல்லாமலே இருக்க வேண்டும். அதுவாலேயே மனச்சலனம் இல்லாது, நிம்முதையான நிட்கள உற்சாகத்தோடு கௌரவமான உரிய அறிவின் அபிவிருத்தி உண்டாகும். ஆலயங்களைச் சுத்தம் செய்யவும். தீபமிடவும் அவ்வவ்வூர் ராஜாங்க நகர நிர்வாகத் தொழிலாளிகளையே நியமிக்க வேண்டும். அதுவால் ஆலயத்திற்கு அடிமையில்லாது வாழ்வார்கள்.

## நிர்வாணம்

52. இருளிலுள்ள நினைவும் தொனியும் அருட்பெருஞ் ஜோதியும் பின் அணுக்களாலுண்டான எல்லா உலகங்களும், ஸ்தூலங்களும், நிர்வாணமே, ஜீவமுத்தர்கள் முதல் இராஜாக்கள் வரை எல்லோரும் எப்போதும் நிர்வாணமாகவே இருக்கிறார்கள். அறிவின் அலங்காரமும் மரியாதையுந்தான் ஆடைகளை உடுத்தியிள்ளது. எப்பேர்ப்பட்ட உடை உடுத்தியபோதிலும் நிர்வாணமாகவே இருந்து வருகிறார்கள். அறிவின் மான மறியாதையே ஆடை தரித்தது.

ஆகையால் நிர்வாணம் அறியாதார் நிர்வாணம் அடைய வேண்டும் என்று ஆடைகளை உடுத்ாதபடி மானத்தைப் பங்கம் பண்ணுகிறவர்கள், அறிவின் செய்கை உடையவர்கள் அல்ல. ஆசைகோள்வதும் மனதாலே, மனதை அறிவது அறிவாலே, பற்றை அறிந்து பற்று அற்று உலகத்துடன் ஒட்டி வாழ்பவரே நிர்வாணம் அறிந்தோர், அடைந்தோர்.

## முப்பாழ்

53. ஸ்தூலம், சூக்குமம், காரணம் இந்த மூன்றும் தாண்டினால் ஜோதி. அதற்கும் அப்பாலுள்ளது ஜோதி, நாதம், நினைவு; அதற்கும் அப்பாலுள்ளது இருள். இதனை அறிந்தது, மூலக்கண், பிடரிக்கண், நெற்றிக்கண் கடந்து உச்சிக்கண்ணில் நின்றதனால்.

## யாத்திரை

54 தன்னுள் உள்ள சக்தியை தான் அறிவதற்கே பல ஸ்தலங்கள் யாத்திரை செய்வது. அறிவின் ஆராய்ச்சி யுடையோர் ஒரு நிமிஷத்தில் அநேக யாத்திரைகள் செய்து முடிப்பர்.

## சாகாக்கால்; வேகாத்தலை

55. நான் என்றென்றைக்கும் செத்தவனுமில்லை. என் வேகம் என்றென்றைக்கும் வெந்ததுமில்லை.

குறிப்பு:—மெய்யுணர்வாளர்கள் நான் என்ற இடத்தில் நாம் என்று வாசிக்கவும்.

## சக்தி

56. அணுக்களின் உள்ளுள்ள தன்மையும், அத் தன்மையின் வேகமும் கூடியது சக்தி எனப்படும்.

அரூபரூப அணுக்களின் வேகம் எங்கும் நிறைந்தது. சுமார் லக்ஷ அணுக்களின் சேர்க்கையே கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாததுமான ஒரு மிக சிறிய ரூபந் தோன்றும். அப்படி அநேக ரூபா ரூபங்கள் சேர்ந்தது ஒரு பெரும் ரூபமாகும். அந்த ரூபத்தாலேயே சக்தியி னுடைய வல்லமையும் தீரமும் வெளிக்குத் தெரியவரும். இதைத் தெரிவதற்கு அநேக சக்திகள் அடைந்த ஒரு

சக்தியாலேயே தான் முடியும். அச்சக்தி மனிதனில் உள்ளது. இந்த சக்தி ஞானசக்தி யென்று பெயர். சக்தியின் ஆரம்பம் (ஆதியும் உலக இணைப்பும் என்ற புத்தகத்தில் பார்க்கவும்) சக்தி என்ற இருளில் சக்தியின் இருப்பு.

57. ஊற்றினின்று பொங்கி வரும் தண்ணீரை உலகங்களெல்லாம் இறைத்தாலும் அது எவ்வாறு கொஞ்சமும் வற்ருது தெளிந்து, நிறைந்து நிற்கின்றதோ அதே போன்று அனுபவ அறிவுடையோரின் தீட்சையும், சொல்லும் விளங்கி நிற்கும்.

## இருதய அப்பியாசம்

58. சிலர் புத்தியைக்கொண்டு மனதை இருதயத்தில் நிறுத்திப்பார்ப்பதுண்டு. அப்படி வெகுகால அப்பியாசத்தின் பின் இரத்தத்தின் வெப்பு அதிகரித்து ஒருவித வெப்பு தோன்றுவதுண்டு. அவ்வெப்பைப் பார்த்து ஆயிரத்தெட்டு மலரைப் பார்த்துவிட்டதாக முடிவு கட்டுவார்கள். அது ஆயிரத்தெட்டு மலர் ஆகவே ஆகாது. ஆயிரத்தெட்டு மலரின் எதார்த்தத்தை “ஆதியும் உலக இணைப்பிலும்” அதனுடைய விரிவை “பேரறிவிலும்” பார்க்க, விளங்கும்’

## இருதயம்

59. அறிவின் சிறப்பு இருதயத்திலும், அறிவின் அபிவிருத்தி ஆருதாரத்திலும் இருக்கிறது. மனதில் எவ்வளவு பரிசுத்த ஞாபகம் வைத்திருக்கின்ருர்களோ அந்த அளவிற்கு இரத்தம் சுழன்று அறிவிற்கு சிறப்புக் கொடுக்கின்றது. அந்த சிறப்பின் பலன்தான் ஆருதாரத்தின் வழியாய் அறிவை அபிவிருத்தியாக்குகின்றது.

மிதமிஞ்சிய காமம், குரோதம், துவேஷம் இரத்தத்தின் சுழலைப் பாதித்து வியாதியை உண்டாக்குகின்றன. திடீரென்று அளவுக்கு மீறிய சந்தோஷமோ, துக்கமோ, ஏற்பட்டாலும் இரத்தத்தின் சுழல் பாதிக்கப்பட்டு இருதயம் நின்றுவிடும். மதஸ்தாபகர்களும், கட்சித் தலைவர்களும் தங்கள் நோக்கத்தின் ஏக்கத்தில் அளவு கடந்து பெரும் பிரயாசை எடுப்பதால் அவர்களுக்கும் இரத்தத்தின் ஓட்டம் பாதிக்கப்பட்டு இருதயம் நின்று விடுவதுமுண்டு. எதார்த்த பக்தர்களுக்கும் யோகிகளுக்கும் தங்கள் திரேகத்தில் சூடு அதிகமிருப்பதால் அவர்களுக்கு இந்த இரத்த ஓட்டத்தின் தடை ஏற்படுவதில்லை. சந்தோஷம், நல்ல சிந்தனை, இவைகளில் நிதானமாய் இருப்பது இருதயத்திற்கு மிகவும் நல்லது.

60. பூமி நொடிக்கு 1,500 மைல் வேகத்தில் சுழன்று கொண்டும், நொடிக்கு 1,144 மைல் வேகத்தில் விலகிச் சென்று கொண்டும், மணிக்கு 1,132 மைல் வேகத்தில் உருண்டு பிறண்டு கொண்டும் இருக்கிறது.

61. பூமி 1,500 மைல் வேகத்தில் சுழல்வதாலேயே ஏகாக்ர சக்தியின் பிடிப்பு இருக்கிறது. 1,144 மைல் வேகத்தில் விலகுவதினலேயே வருஷம், மாதம், நாள், மணி, நிமிஷம், செக்கண்டுகளாகப் பிரிக்கப்படுகிறது. மணிக்கு 1,132 மைல் வேகத்தில் உருளுவதால் இராப் பகலும் அதனல் ஏற்படும் பிரழ்வதால் உத்ராயணம் தக்ஷிணயணம் ஏற்படுகிறது. இதைவிட வேகமாக நமது இரத்தச் சுழல் நரம்பு நாடிகளில் ஓடிக்கொண்டு இருக்கின்றது. அந்த வேகத்திற்கு ஏதாவது தடையோ, மேலும் அதிக வேகமோ கொடுப்பது தன்னுடைய குணதிசயங்களைப் பொருத்தது.

62. பூமி மணிக்கு 1,132 மைல் வேகத்தில் உருளுவதால் இராப்பகல் ஏற்படுகின்றது. ஒரு மணிக்கு 1,132 மைல் வேகத்தில் போகக்கூடிய யந்திரம் சரியாக நேர் மேற்கு திசை நோக்கி செல்லுமாகில் அதில் இருப்பவனுக்கு புறப்பட்ட நேரம் எங்கும் இருக்கும்.

63. முக்கிய குறிப்பு:—ஒரு மனிதன் தன் உருவத்தைப் புகைப்படத்தாலேயோ, அல்லது கைச் சித்திரத்தாலேயோ மிக வசீகரமாக அழகு படுத்தி அதைக் காலையில் சுமார் ஏழு நிமிஷத்திற்குக் குறையாமல் நல்ல ஞாபகத்துடன் கூர்ந்து அதைப் பார்த்துவிட்டுத் தன் தொழிலுக்குச் சென்றால், சரீரம் தளர விடாதபடியும், தனக்கே பெருந் துணிவும், அறிவின் அபிவிருத்தியும், திடசித்தமும், எதார்த்த சிந்தனையும், பல நன்மைகளும் ஏற்படக்கூடும். தன் வயதையும் இதனால் கூட்டிக் கொள்ளலாம். அங்கு வேறு எவ்வித படங்களும் இருக்கக்கூடாது.

64. ஆத்மாவின் வாகனம் அறிவு. அறிவின் வாகனம் உடம்பு. அவ்வுடம்பில் துருப்பிடிக்கும் பல துவேஷ இரும்புகளை ஏற்றுவதைவிட பரிசுத்த சமத்துவ ஞாபகமாயுள்ள வைடூரிய முத்து எண்ணங்களை ஏற்றிக் கொள்ளுங்கள்.

65. இருதயத்திற்கும் மூளைக்கும் 16 அங்குலம், இதற்கு மேற்பட்டது ஆருதாரம்.

66. எதுவும் பசித்த பின் சாப்பிடுவதிலும் சாதத்தை அதிகம் குழைய வைக்காமல் பதமாக வேக வைத்துச் சாப்பிடுவதிலும் இரத்த விருத்தியும், திடசித்தமும், எதார்த்த அறிவும், நல்ல தவநிலையும், மெய்யுணர்வாளர்களுக்கு உண்டாகும்.

67. பெரியோர்களையும், முத்தர்களையும், தன் விசுவாசத்தால் போற்றுவது மிக உத்தம நிலையே. அப்பெரிய ஜீவமுக்தர்கள் தன்னிலையடைந்து கொண்டாலும், அந்நிலை பூலோகத்தில் எப்போதும் மற்றவர்களிடத்திலும் இருந்துகொண்டிருக்கிறது. அவ்விசுவாசம் கொண்ட நீங்கள், உங்களிடத்திலும் அப்பதவி இருந்துகொண்டிருக்கிறது என்று நிச்சயமாக நினைத்துக்கொள்ளுங்கள். அந்நிலையுடையவரிடம் போய் உங்களின் முக்திநிலை அறிந்துகொள்வது அவசியம். அதுவே குரு சிஷ்யர் என்ற பதவி.

68. குருவை யடையாத முடிவு எதைப்போல் என்றால்; அறிவில்லா ஞானமும், மீசை இல்லா ராஜாவும், ஸ்தனமில்லாப் பெண்ணும், வெளிச்சமில்லா வீடும், ஊற்றில்லாக் கிணறும், கருத்தில்லா கண்ணும், விசாரணையில்லா தீர்ப்பும், விலையில்லாப் பொருளும், ஆராய்ச்சியில்லா அறிவும், வீரமில்லாச் சொல்லும், உருக்கமில்லா தவமும், கேள்வி தெரியா விடையும், விழிப்பில்லாத் தூக்கமும், சமயமறியா சமர்த்தும், விஸ்வாசமில்லா அன்பும், விளைவில்லா நிலமும், உலகத்தையறியா சந்நியாசமும் போலாம்.

## கண்

69. ஆத்மாவின் அனுபவம் அறிவது அறிவின் கண்ணால். அறிவிற்குக் கண் ஐம்புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி). கண்ணை இமையாதிருப்பது மனிதனுக்கு முந்திய தேவ நிலை. அந்நிலையின் பலன்தான் மனித தேகம். கவலையில்லையேல் இமைப்பதில்லை. சிசுக்களுக்குக் கவலையுமில்லை; இமைப்பதுவுமில்லை. சிறிது சிறிதாக இமையாதிருக்கப் பழகுதல் வேண்டும். கண்ணில் உள்ள நரம்புகள் மிக மிக நுட்பம் உடையது. கண்களைச்

சுற்றியுள்ள நரம்புகளை விரல்களால் அழுத்தினல் பளீர் என்று செஞ்சுடர் தெரிவதுண்டு. அதுவும் அந்த நரம்பு களில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத்தைத் திடீரென்று நிறுத்துவதாலேதான் அச்சுடருக்குக் காரணமேயொழிய வேறொன்றுமில்லை. அப்பேர்ப்பட்ட கண்களைச் சுற்றி யுள்ள நரம்புகளை எக்காரணத்தாலும் விரல்களால் அழுத்தவே கூடாது. அருளை அடைவதற்கென்று தன் பிரகாசக் கண்களைக் கெடுத்துக் கொண்டவர்கள் அநேகர். கண்ணின் கண்மணியின் உள்ளுள்ள பாவையில் ஞாப கத்தை வைத்துப் பழகுபவர் அநேகர். மேலான நிலைகளை அடையும்பொருட்டே அவ்வப்பியாசத்தின் செய்கை யாகும். ஆனல், அதுவால் முடியாது. ஞானநிலை "ஞானக் கண்ணில்" பார்க்கவும்.

70. மிக அழகுள்ள சரீர முகத்தின் கண்ணில் பீளை சிறிதுயிருந்தால் எப்படி அவ்வழகைப் பேதப்படுத்திக் காண்பிக்கின்றதோ, அதேபோல் எதார்த்தம் அனேகம் பேசினும் துவேஷம் சிறிது இருந்தால் அவ்வெதார்த்தத் திற்கு அழகில்லை.

71. மெய்யுணர்வாளர்களே! உங்களின் கண்ணொளி அதிகரித்து, அவ்வொளியின் உருக்கம் கண்ணின் இமையில் கருணை அதிகரித்து, அக்கருணையின் பெருக்கம் அறிவின் விழிப்பும், அவ்விழிப்பின் பார்வை சதா உணர்விலும் அவ்வுணர்வுடையோர் தன்நிலையுடையோர்.

## ஞானமும் போகமும்

72. தன் வயதின் பக்குவத்திற்குமேல் போகத்தால் சரீரத்திலுள்ள அசுத்தங்கள் வெளியேறி, சரீர சுகம் உண்டாகும். சுமார் 25 வயதிற்குமேல் நாள் ஒன்றுக்கு ஒரு முறையும், வயது 35-க்கு மேல் 60 வரையில் வாரம்

இரு முறை. மாதம் இரு முறை. ஒரு முறை ஏற்படும் போகத்தால் சரீரத்திற்கு மிகமிக நன்மையுண்டு.

73. மெய்யுணர்வாளர்கள் ஏறுபடிஸ்தானத்திலாவது சுத்தி செய்த இடத்திலாவது, அறிவை நிறுத்தி, கண்ணை இமையாதபடி போகித்தால் பூரணசுகம் அடைவீர்கள். போகம் கண்களை விசேஷ பார்வைக்குடையதாக்கும். கண்கள் சரீர அமைப்பில் மிகமிக சிறப்புள்ளதாகும். மிதமிஞ்சிய போகத்தாலும், கோபத்தாலும் கண்கள் கெடுவதுமல்லாமல், வாதம், காசம் உற்பத்தியாகின்றன. இதற்குக் காரணம் விந்து குடிலையில் ஊறுவதற்கு முன்னமேயே போகிப்பதால் இரத்தக் குழாய்களின் அடியில் ஓடும் விந்து, நாடிகளிலுள்ள சரியான நிலைக்கு வராத விளைவில்லா இளகலான விந்துவை நஷ்டமடையச் செய்து, அதனால் சரீரத்திற்கும் கண்ணிற்கும் கெடுதல் உண்டாகும்.

74. ஆனால் போகத்தில் நிதானம் இருக்கவேண்டியது அவசியம். சரியான நிதான போகமுள்ளவனுக்கு வியாதியே ஏற்படாது.

75. உணர்வின் வயது அதிகமாக ஆக எவ்வளவு போகம் செய்தாலும் சத்து குறையாதிருப்பதுடன் தவத்தின் பாதையும் விசாலமாகும்.

## குடிலை

76. மூலாதாரம், உந்தி, அடிமூலம், கீழ்மூலம், மூலக்கண் என்று இதை பலவிதமாய் சொல்லலாம். இது நீர்த் துவாரத்திற்கும் மலத் துவாரத்திற்கும் இடையிலுள்ளது. இது காக்கையின் முட்டை அளவுள்ளது.

இதில் அடங்கி இருக்கும் விந்துவின் நிலை ஒரு கூடையினால் மூடப்பட்ட விளக்கின் நிலையை ஒத்திருக்கிறது. இதை மேல்நோக்கிக் கொண்டு வர ஏக்கத்தோடு அறிவு காத்திருக்கிறது.

## ஆசன விரிப்பு

77. வெள்ளைத்துணி விரிப்பு தொழிலாளிக்கும் வியாபாரிக்கும் சிறந்தது. கம்பளியின் விரிப்பு அறிவின் பெருந்தன்மைக்குரியது. மான் தோல்களின் விரிப்பு யோகம், சாந்தம் அமைதிக்குரியது. வேங்கைத்தோலின் விரிப்பு அறிவின் முடிவறிந்த வேகமுடையவருக்குச் சிறந்தது, அதற்காக வேண்டிதான் ஒரு சமயத்தில் "வேகத்தை யடக்கிய வேகமுடையோர் வேங்கைத்தோல் விரிப்புக் குரியவர்" என்று சொல்லியிருக்கிறேன். அறிவின் நுட்பம் உடையவர்கள் அங்கங்குள்ள சமய சந்தர்ப்பங் களுக்குத் தக்கவாறு எவ்விரிப்பிலும் சமமாக இருந்து கொள்வர். அதுபெரும் உத்தம நிலையாகும்.

## மனிதனின் பிறவி

78. அவனவன் ஏக்கத்திற்குத் தக்கவாறு ஒரு தேசத்திலுள்ளவன் மறு ஒரு தேசத்திலும் பிறவி எடுக் கின்றான். ஏக்கத்தின் வேக அறிவிற்கு இனபந்துவோ, மதமோ பொறுப்பு அல்ல. எந்த தேசத்திலுள்ளவர்களும் எந்த லோகத்திலுள்ளவர்களும் சமத்துவ சகோதர தத்துவ முடையவர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள். சில அறிவின் பலஹீன ஆத்மாக்கள் பிறவியின் சம்பந்தமாக பூதலோகத்தில் விபரம் பார்க்க. பிறர் என்று யாரையும் நினைக்காமல் நம்மில் ஒருவர் என்று நினையுங்கள்.

## தன்னை உணர்தல்

79. தன் குற்றத்தைத் தானே உணர்ந்து நல்ல நடத்தையாய் நடந்ததின் பலனே இப்பிறவியில் சரீர குறையின்றி அறிவுடையவராய்ப் பிறந்திருக்கிறீர்கள். அந்த அறிவுடையவராய்ப் பிறந்ததிலும் தன்னைத் தான்

அறிந்துகொள்வதற்காக வேண்டி ஞானம் தேடி அலையக் கூடியவர் வெகு பெரும் சிலர்.

உதாரணம் :—நீங்கள் முன் ஜென்மங்களில் உங்கள் குற்றங்களை உணர்ந்து, உள்ளும் புறமும் நன்னடத்தையாய் நடந்துகொண்டு, சரிகை, கிரியை, யோக வைராக்ய தீரத்தில் ஈடுபட்டிருந்ததால் அப்பிறவியில் சரீரத்தை விட்டபோது காரண சூக்குமலோகத்தில் சுகமாய் இருந்தீர்கள். உங்களின் நன்னடத்தை அக்காலங்களிலிருந்த பெரியோர்கள், இனத்தார்கள், மற்றுமுள்ளவர்களின் அறிவில் பதிந்திருந்தமையால், அவர்கள் அடிக்கடி நல் விஷயங்களில் ஈடுபட்டபோதெல்லாம் உங்களை நினைக்க வேண்டியதாயிற்று. அதுவுமன்றி, அக்காலங்களிலுள்ள குற்றமுடையோர்களும், தங்கள் குற்றங்களைவிட்டு மீளுவதற்காக வருந்தி, உங்கள் நன்னோக்கத்தை இணை வைத்து, அடிக்கடி உங்களை நினைத்தார்கள். இந்த பலனும், தன் அவாவை முடிப்பதற்கான நன்னோக்கப் பயனும் சேர்ந்து இப்பிறவியில் சரீர தீங்கில்லாமல் நல்லடியார்களாய்ப் பிறந்தீர்கள்.

80. உலக நல்லடியார்களே! நீங்கள் விளைவித்த நற்பொருளை நீங்களே அழித்துக்கெடுத்துவிடாமல் நன்னடத்தையில் நடந்துகொள்ளுங்கள். கண்ணியத்தின் விளைவும் குணத்தின் உயர்வும் தன்குறை உணர்ந்தோர்க்கு.

81. இப்பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபையில் சேர்ந்த மெய்புணர்வாளர்களே! அறிவைக் கடந்த முத்தியின் பொருளை உணர்வாகக்கொண்டிருக்கிறீர்கள். மேலும் அநேகர் வந்து பெற்றுக்கொள்ளவும் போகிறார்கள். நீங்கள் அடைந்த பெரும் பதவிக்கிணங்க இனி உலக மக்களிடம் உங்களின் கருணைக்குரிய கண் பார்வைகள் கருணையாய்ப் பார்ப்பதும், உங்களுடைய

நடை, உடை, பாவனைகள் கண்ணியமாயும், ஒழுக்கமாயும், நடப்பதும், உங்களிடம் தோன்றும் நற்குணத்தின் ஞாபகத்தைத் தவிர, மற்ற குணத்தை உணர்ந்து உடனுக்குடனே தள்ளி விடுவதும், உங்களுடைய சொல்லின் இனிமை பிறருக்கு யாதொரு தீங்குமில்லாமல் பேசுவதும் பிறருடைய துற்குணத்தைக் கிரகிக்காமல் அவர்களின் பேரில் நல்ல ஞாபகமே சதாகொண்டிருத்தலும் வேண்டும். உங்களுடைய ஞாபக சக்தியால் அதே க்ஷணத்தில் அல்லது சிறிது நாளடைவில் அவர்கள் நல்ல நாட்டத்திற்குரியவர்கள் ஆவார்கள். மேற்கண்டபடி நீங்கள் தூக்கத்தில் ஏற்படும் கனவுகளிலும் இதே நினைவாய் நடந்துகொள்ள வேண்டுமென்பது முக்கியம். தன்னுடைய நடத்தையின் பரிசுத்தத்தைத் தன் கனவில் தெரிந்துகொள்ளலாம். உங்களுடைய உயர் குணங்களால் உலகத்தார்களை நல் விஷயங்களில் நாடும்படி செய்வதும், நல்நாட்டத்திற்குரிய காரணஸ்தர்களாக்குவதும் நீங்களே.

82. உலகத்திலுள்ள மற்ற குறையுடையவர்கள் இதைப் பார்த்து மனதைப் புண்படாமல் அக்குற்றத்தை ஆமென உணர்ந்து கொண்டால் அப்பொழுதே அக் குறையைவிட்டு விலகியவராவதுடன் அவர்களிடம் இருக்கும் வியாதிகளும் தீரும். அவர்கள் மறு பிறவியில் யாதொரு குறைவுமின்றி பிறப்பார்கள் என்பது நிச்சயம்.

83. கல் முள் எச்சலுக்கெல்லாம் செருப்பால் காலைப் பாதுகாப்பதுபோல் குரோதம், துவேஷம், நயவஞ்சகக் கள்ளருக்கெல்லாம் அன்பின் சிறப்பால் அறிவின் கலையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

## கனவு

84. அனேக காரணங்களினல் கனவு ஏற்படுகிறது. உங்கள் ஞாபகத்தில் உள்ளதே கனவாகவும் அதில்

இதற்கு முன்பு நடந்த அனுபவங்களும் நடக்கப் போகும் அனுபவங்களும் நீங்கள் பார்த்து விரும்பிய அநேக விஷயங்களும் ரூபங்களும் அல்லது நீங்கள் பார்க்காமலே, பிறர் உங்களைப்பார்த்து எது விரும்பினர்களோ அதுவும் தெரிவதுண்டு. அனேக இடங்களில் நடந்த மற்ற சம்பவங்கள் அணுக்களில் பதிந்திருப்பதால் அது நீங்கள் தூங்கினவுடன் அவ்வணுக்களின் அலை உங்களை மோதுவதில் அனேக மற்ற விபரமும் தெரிவதுண்டு. நல்ல பக்தி விசுவாசத்தோடு படுத்திருந்தால் ஒரு இரவில் தோன்றும் கனவு மறு இரவிற்குள் நடந்தே தீரும். இது சுமார் $4\frac{1}{2}$ வருஷம் வரையிலும் இவ்வனுபவங்கள் என்னிடமிருந்தது. கனவில்கண்ட நற்காட்சிகளே, பின் அனுபவவாயிலாக ஏற்பட்டு அநேக காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதில் மிகவும் முக்கியமானது கனவில்பெற்ற உபதேசமே. $8\frac{1}{4}$ வருஷத்திற்கு பின் 1400 மைலுக்கு அப்பால் அணுவளவேனும் மாறுதல் இல்லாமல் நடந்தேரியது. அதுவரையிலும் அக் கனவின் ஞாபகம் என்னை உருக்கப்படுத்தியும் திடப்படுத்தியும் வந்தது. இதுபோல் பெரும் பெரும் அனுபவத்தை விரிவாய்ச்சொல்லாமலே நிறுத்துகிறேன். ஆனல் பல அசந்தர்ப்பத்தாலும் கனவு காண்பதுண்டு. வலது பக்கம் திரும்பிப் படுத்து இருக்கும் பொழுது அறிவிற்குப் பொருத்தமில்லாத பயங்கரமான சில கனவுகள் காணலாம். இத்துடன் சிறுநீரும் வயிற்றில் அதிகமானல் மிகக்கொடிய சம்பவங்கள் கனவில் தோன்றும். அதே சம்பவங்கள் இடதுபக்கம் சாய்ந்து படுத்திருந்தால், பல நல்ல காரியங்களை பற்றிப்பேசுவதாகவும் ஈடுபடுவதாகவும் தெரியவரும். இதிலும் சிறுநீர் வயிற்றில் இருந்தால் அதற்குச் சிறிது சலனம் ஏற்படும். மேல் நோக்கிப் படுத்திருக்கும்பொழுது அனேகமாகக் கனவுகள் தோன்றுவதில்லை. அப்படி அசந்தர்ப்பமாய்த் தோன்றினலும் அது ஞாபகத்திற்குப்

புலப்படாது. ஆனால் இதே நிலையில் தூங்கும் நல்லடியார்களுக்கு, உலகிற்குதவக்கூடிய அநேக நல்ல விஷயங்கள் தோன்றுவதுண்டு. நடை பாதைகளிலும் குளிர்ந்த காற்றுள்ள இடத்திலும் சிறுநீர் கழிக்காதும் கால்களைக்கழுவாதும் படுத்தாலும் புளிப்பான ஆகாரத்தாலும் இரத்த ஓட்ட தடைகளாலும் இவைகளால் கனவு தோன்றும்.

ஒருவன் படுக்கப் போகுமுன் கனவே காண்பதில்லை என்ற திடசித்தத்தோடு ஒரு மாதம் பழகுவானானல், பொல்லாக் கனவு தோன்றவே தோன்றாது.

## பிரம்மச்சாரி

85. ஒரு மனிதனாய்ப் பிறப்பது தனி ஒரு ஏக்கத்திற்காக வேண்டியல்ல. அனுபவித்துப் பல ஏக்கங்களை முடிக்கவும், அறிவில் அறிந்து பல ஏக்கங்களை முடிக்கவும் தான். அனுபவித்து முடிக்க வேண்டிய ஏக்கத்தை அறிவால் முடிக்க முடியாது. அது சரீர அனுபவத்தில் வந்தபிறகு தான் அறிவால் முடிவு கட்டமுடியும்.

86. எவன் தன் இன்பத்தில் எல்லாம் அறிந்தவனோ, அவனே பிரம்மச்சரிய தத்துவம் முடித்தவனாவான். தனி சிற்றின்பமில்லாதவன் மட்டும் பிரம்மச்சாரியாக மாட்டான். இது சரீர சம்பந்தப்பட்ட முக்கியமான ஆசையில் இது ஒன்று. இதை அவன் கண்டித்து விட்டதாக அவன் உடம்பினறிவில் பதிந்திருந்தால், அது சம்பந்தமான கனவு, மனசேட்டைகள் இல்லாமல் இருக்கவேண்டும். அப்படியே தான் சரியாக இருப்பதாகத் தனக்குத் தெரிந்தாலும் ஒரு வைராக்கியப் பெரும் பக்தனென்று சொல்லலாம். இதற்கும் முக்திக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

87. ஆகையால் அநேக கனவுகளில் கண்டதை விழித்தால் ஒன்றும் தோன்றுவதில்லை. இந்த பிரம்மச்

சாரித் தன்மையைவிட்டு அவன் ஒரு பெண்ணை சம்போகம் செய்ய கனவு காண்பானுகில் அவன் விந்து கலிதமாகி விடுகிறது, அதுவாலேயே சரீரத்திலுள்ள முக்கிய அனுப வத்தில் இது ஒன்று என்று சொல்லி இருக்கிறேன்.

88. பொருளைச் சம்பாதிக்க வேண்டியது முக்கியம். அப்பொருளை நீதியாக அனுபவிக்கவேண்டியது அதைவிட முக்கியமானது போல நம்முடைய உடம்பிலுள்ள விந்துவை பாதுகாத்து அனுபவித்துக்கொள்ளுங்கள்.

## ஞாபக சக்தியின் தொடர்பு

89. ஒரு மனிதனின் நினைப்பின் ஞாபக சக்தியின் வேகம் அநேக தொடர்புகளுக்குள்ளது ஒருவன் அறிந்த இடத்தின் வாயிலாகவும் அறிவில் பதிந்த ரூபா ரூபங்களின் வாயிலாகவும் தன் அறிவில் பதிந்த ஒருவரை நினைத்த மாத்திரத்திலே எத்தனை 1000 மைலுக்கப்பால் இருந் தாலும் சரியே இவனை அவன் நினைக்கிருன். ஒரு கூட் டத்தின் வாயிலாக ஒருவரைப் பார்த்திருந்தால் இவனுக்கு அவன் தெரியாது போனுலும், இவன் அவனை நினைத்த மாத்திரத்திலே அவனுக்கு அக்கூட்டத்தின் ஞாபகம் வந்துவிடுகிறது. அக்கூட்டத்தில் ஒருவர் கடுங்கோபத்தா லேயோ அல்லது மற்ற அசந்தர்ப்பமான வார்த்தைகள் பேசியிருந்தாலும் அதை ஒரு மனிதன் நினைத்து வருந்துவா னுகில் அன்று பேசியவன் அதை உடனே உணரக்கூடிய சக்தி ஏற்படுகிறது. ஆகையால் ஒருவர்க்கொருவர் பல காரண காரியங்களால் தொடர்பு ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது. மேலும், பெரிய ஸ்தலங்களிலோ அல்லது பெரிய குரு ஸ்தானங்களுள்ளவர்களிடத்திலோ அநேக ரூபா ரூபங்களின் ஏக்கம் அங்கு நிறைந்திருக்கின்றன. அதனுல் அந்த ஸ்தலத்திற்கும் அக்குருவுக்கும் தனிசக்தி ஏற்பட்

டிருக்கிறது. மேலும் உலகத்தில் சுபகாரியங்களின்போது சுவையான விருந்தும் அறிவின் உற்சாகச் சொல்லும் ரம்மியமான தோற்றங்களும் வைத்து நடத்தி வருவது மிக நன்று. அப்படிச் செய்வதால் உற்சாகத் திருப்தியும், ஞாபக அபிவிருத்தியும், இவ்விருவர்களுக்கும் உண்டாகிறது. இதற்காகத்தான் ஒரு சுவையால் ஒரு சொல்லால் ஒரு தோற்றத்தால் என்று நான் அடிக்கடி சொல்லுவதுண்டு.

## நுட்பம்

90. (1) தொழிலில் அறிவின் நுட்பம். (2) வியாபாரத்தில் அறிவின் நுட்பம். (3) இராஜாங்க நிர்வாகத்தில் அறிவின் நுட்பம். (4) தீர்க்கதரிசிகளின் அறிவின் நுட்பம். (5) பெரும் ஆராய்ச்சியாளர்கள் அல்லது சித்தர்களின் அறிவின் நுட்பம். (6) இவைகளுக்கெல்லாம் ஞானிகளின் அறிவின் நுட்பமே பெரும் நுட்பம். இந் நுட்பமே தன்னைத்தான் அறிந்த நுட்பமாகும். ஆகையால் எவ் விஷயத்திலும் அறிவின் உயர்வு அவசியமென்பது எல்லோருக்கும் தெரியவரட்டும்.

91. ஒரு பெரும் பாண்டத்தில் அடைத்த நீரில் ஒரு சொட்டு குறைந்தாலும் குறைவே போன்று சமயா சமய படிப்பின் சொல்லும் சமர்த்தின் சாமர்த்தியச் சொல்லும் என்றென்றைக்கும் நிறைவாகாது.

மேற்கண்ட ஆறு நுட்பங்களும் ஒரே நுட்பத்தில் இருப்பதுண்டு.

## குருக்கள்

92. உலகில் ஒருவருக்கொருவர் குருவாகவே இருந்து கொண்டு வருகிறார்கள். தன்னைத்தான் அறிந்தவரே உலகங்களுக்கெல்லாம், குரு அம்சம் உடையவர்.

மற்ற எந்த குருக்களேயும் சமாதானப்படுத்தக்கூடிய சக்தி இவருக்குத்தான் உண்டு. குரு பதவியடைந்தவர்களும் அநேகர் இருக்கிருர்கள். அப்பதவிக்குச் சரிசமானமான அம்ஸமுடையவர்களும் அநேகர் இருக்கிருர்கள், இருப்பார்கள். இவ்வம்ஸமுடைய குருக்கள் சமத்துவமும், தாம் ஒன்றை இணைவைத்தோ, ஒரு பிரதிபிரயோஜனத்தைக் கருதியோ இவர்களது செய்கை ஒன்றுமே இருக்காது. உலக மக்களின் அறிவின் பெருக்கத்தையே இவர்கள் பிரதிப் பிரயோஜனமாக நினைப்பர்.

93. உடலுக்கு வேண்டியது ஆகாரமும் சுகமும். அச்சுகத்தை யறிந்து அனுபவிப்பதே ஆத்மாவின் ஏக்கத்தின் முடிவு. ஆகையால் சிஷ்யர்களுக்குக் குருவின்மேல் விசுவாசம் மிகுதியாயிருக்க வேண்டும். அவ்விசுவாசம் எதைப் போன்று என்ருல், குரு, மின்சாரம் நிறைந்த பெரும் சக்தி நிலையப் போன்றும், சிஷ்யன் அச்சக்தியைக் கிரகிக்கும் பல்பின் (Bulb) திறமையைப் போன்றுமாகும். பல்பானது தன் குறிப்பிட்ட சக்திக்கேற்றதையே நிலயத்திலிருந்து சக்தியைக் கிரகித்து பிரகாசிக்க முடியும். ஆனல் சிஷ்யனே தன் அறிவின் பெருக்கத்திற்கும், விசுவாச திடத்திற்கும் பொருத்ததாய் குருவில் சிஷ்யன் பிரகாசிக்கலாம். விசுவாசத்தால் அறிவின் பெருக்கம் இருந்தால் குருவின் நிலேயே சிஷ்யர்களுடைய நிலே, குருவினிடம் அண்டுவதற்கு முன், தான் பெருங் குற்றவாளியாய் இருந்தபோதிலும் சரியே, குருவை அண்டின நிமிஷத்திலிருந்து அவன் குற்றமற்ற உத்தமநிலேயுடையவனே. உலகத்தில் பெரும் குற்றமுடையவர்கள் யாரென்ருல் :— குருவை அடுத்த பின்னும் குற்றம் செய்தவனே. இவன் இராஜாங்கம், இனத்தார் இவர்களே எல்லாம் புறக்கணித்தவனே. ஒரு குரு அநேக அனுபோக வாயிலாக பாடு

பட்டதின் பலனும், அநேக மக்களின் ஏக்கத்தின் பலனுமே ஒரு குரு ரூபமாக தோன்றுகிறது. குரு ஸ்தானம் அறிவின் பெருக்கத்திற்கும், பரம்பரை பாத்தியதைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அக்குருவினுடைய அனுபவமே அநேக பரம்பரையைக் காட்டிலும் மேம்பட்டது. அவரே அவரை அறிந்தவராவர். அதனால்தான் ஒரு சமயத்தில் "அறிவின் உறுதியில் அறிவின் வேகம்; அறிவின் வேகத்தில் அறிவின் அனுபவம் என்றேன். மற்றொரு சமயத்தில் அறிவை அறிவீனத்தால் ஜெயிக்காமல் அறிவீனத்தை அறிவால் ஜெயிக்கவும்'' என்று சொல்லியிருக்கிறேன்.

94. கையில் துப்பாக்கி உள்ள போர்வீரனுக்கு பொறுமையும், நிதானமும் அதிகம் என்றால் ஞானமுடிவடைந்த குருக்களின் பொறுமை இணையீடு அற்றதாகும்.

95. "வெகு சிறப்பையும் சிறு அழுக்கையும் கண்ணால் பார்த்து அறிவு ஆனந்தித்தாலும், முகத்தின் அழகையும் கண்ணின் அழுக்கையும் கண்ணாடி மூலம் காண்பது போல் தன் பிரகாசத்தையும் அறிவின் நிற குறைவையும் குரு முகத்தாலே அறியவேண்டும்.''

## குருவையடைந்தோர்

துணையை நாடி, துணைவியை யடைந்து இன்ப சுகபோக நித்திரை ஆனந்தத்தில், துணையில்லா மங்கையைத் தேடின பலன் ; குறையில்லா குணமும், கொடைவிரும்பா நெஞ்சமும். கூடினால் போதுமென்ற கொங்கையில்லா மங்கை குருவாய் வாய்த்தார்.

என் இருதய மலர்களாகிய மெய்யுணர்வின் பெண் சிரோன்மணிகளே! உங்களைத் தாயின் தன்மையிலும், குழந்தையின் தன்மையிலும் இருவகையிலும் ஒப்புக் கொண்டேன். அதேபோல் தகப்பன் தன்மையிலும்,

தன் அன்பின் குழந்தையின் தன்மையிலும் நீங்கள் என்னை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள், இம்முறையை அறியாத உலக குரு, சிஷ்யர்களால்தான், பெண்டுகளால் பெரும் எதார்த்தம் கெட்டது, கெட்டது என்று பேர் பரவி விட்டது. இம்முறை தெரிந்த பெண்டுகளால்தான் பெரும் எதார்த்தம் நிலைத்தது. நிலைத்தது என்று நிரூபிக்கத்தான் இச்சபையில் சேர்ந்திருக்கின்றீர்கள். இன்னும் சேரப் போகின்றீர்கள்.

திரேக பேத மிரண்டுமற்று, கருத்தின் கண்ணோடு பார்த்தால், இரண்டிலும் ஆண், பெண் உண்டு.

பெண் சிரோன்மணிகளே! என் சொல்லில் ஆணாய் இருந்துகொள்ளுங்கள். அல்லது தைரிய திடசித்தத்தோடு நிலை நிறுத்துங்கள்.

என் இருதய மலர்களே! இச்சபையில் ஞானதீக்ஷை பெற்று உணர்வு வந்தவுடன் எல்லாமறிந்து கொள்ளும் தன்மை ஏற்பட்டுவிட்டது. மலைப்பு ஏன்? குருக்களுக்கு சிறப்பு சிஷ்யர்களால், சிஷ்யர்களுக்கு சிறப்பு குருக்களால், இவ்விரண்டும் தலை, உடல் போன்றதாகும்.

உதாரணம்: கடல் எல்லா கால்வாய், ஆற்றின் நீரையும் ஆமோதித்து, இடம் தந்து சேர்த்துக்கொள்ளும். பின்பு வந்த ஆற்று நீரின் மண்டியையும், அதன் குணதிசய விஷய சுவைகளையும் மாற்றி தெளியவைத்து, நாளடைவில் கடலோடு கடலாய் சேர்த்துக் கொள்ளுகிறது. ஆற்றின் நீரோ கடலடைந்த ஆனந்தத்தால் திரும்புவது இல்லை. மனிதன் என்ற பேர் கொண்டவர்கள் குருவையடைந்தும் சலன மேற்பட்டு திரும்புவதுண்டு. மனிதனுயுள்ளவன் திரும்புவதேயில்லை. ஆறும் கடலும் பின் ஒன்றே. குருவும் சிஷ்யனும் ஏக ஒன்றே. மேலும் சிங்கத்தின் குழந்தைக்கு உடனே தைரியம்உண்டாகி, பாயும் தன்மை ஏற்படுவதில்லை

ஆனால், எல்லா பிராணிகளும் அதன் பாய்ச்சலுக்குப் பயந்தே நடக்கின்றன. வயதும், சமயமும் வாய்க்கும் போததான் அது பாய்கின்றது. இராஜனின் குழந்தை தரித்த அன்றைக்கே செங்கோலும் அதன் ஆட்சியும் அவனிடத்திலே உண்டு. ஆனால், வயதும் அறிவும் வந்த பின்தான் செங்கோலாட்சி புரிகின்ருன். உயர்ஞான சபையின் தீட்சை ஈசஞகவுள்ள மனிதனுக்கு ஈசன் நிலையில் நிறுத்துகிறது. அறிவின் பெருக்கத்தால் அவனே அறிந்து கொள்ளும் தன்மையை தவத்தில் வயதால் எல்லா மறிவார்கள். அறிவீர்கள்.

## 6 வகை தீட்சைகள்

96. (1) அன்பால் அழைத்தல், அணேத்தல்.
(2) தன் சக்தியால் குண்டலி சக்தியை எழுப்புதல்.
(3) தொட்டு உபதேசித்தல்.
(4) கண்ணல் பதிய வைத்தல்.
(5) சொல்வாசகத்தால் தெளியவைத்தல்.
(6) ஞாபகத்தால் அடிக்கடி நினைத்து நினைப்பு ஊட்டுதல்.

97. ஆகிய இவ்வாறுங் கூடியதே உயர்ஞான தீட்சையாகும். சில குருக்கள் இவ்வாறில் ஏதாவது ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு உபதேசம் செய்வார்கள். அதனல் ஒருவித அறிவுதான் விருத்தியாகும்.

98. மெய்புணர்வாளர்களே! சுருதி, நூல், சாஸ்திர, வேத மதங்கள் எல்லாம், சுருக்கிச்சொல்லொன்றில் அடக்கி, சுழிமுனேயும் கடத்தி, சும்மா இருக்கும் சுகமே உணர்வு. சும்மாயிருக்கும் சுகம் சொல்வதென்ருல், சொல்லும், சொல்லுள்ளும், சுகமும், மணமும், சுழலும் சூழ்ந்து, சொல்லொண்ணுத சொல்லுக்குள் உள்ள சுக

மாம் சுகமென்று சொல்லலாம். ஆகையால் உணர்வால் சுகத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

99. எம்மார்க்கமும் சன்மார்க்கமே. அம் மார்க்கத்தின் முடிவு, அவனில் அவனே அவனறிந்து, அறிவிற் கடந்த மெய் உணர்வடைந்தாலே

ஆகையால் உலகத்திலுள்ள எல்லா மார்க்கமும், மார்க்கங்களைக்கடந்த தீக்ஷைகளும் தன்னைத்தானறிவதற்கே.

100. தாகமதிகரித்தால் தண்ணீருக்கு பாகுபாடில்லை. மோகமதிகரித்தால் ஜாதிமத பேதகமில்லை. அன்பு அறிவு அதிகரித்தால் மதத்துவேஷத்திற்கிடமில்லை. கனமான தவமிருந்தால் பவமான குணமெல்லாம் பட்டெரியும்.

## வயது 100 இருக்க உபாயம்

101. மூச்சை ஸ்தம்பனம் செய்யாமலிருப்பதும் வாயால் மூச்சை விடாமலிருப்பதும், அளவுக்குமீறிய சந்தோஷமும், தூக்கமும், வியப்போ, ஒன்றின்மேல் மிகப் பற்றுதலோ இல்லாமலிருப்பதும் குரோதம் வரவொட்டாமல் தடுப்பதும், தூக்கம், போகம், விழிப்பு அதிகமில்லாமலிருப்பதும் போதை வஸ்துக்களை உபயோகியாதிருப்பதுடனும் பெரும் சப்தத்துடன் பேசாதிருப்பதும் இப்படி இருந்தால் வயது 100 இருக்கலாம்.

102. பொல்லாது இருப்பது நல்லவர்களின் சீர் திருத்தத்திற்கே. கஷ்டமும் நஷ்டமும் கடந்த அனுபவத்திற்கே. மந்திரமும் தந்திரமும் யந்திரமும் உறுதி நிலைப்பதற்கே.

103. கன்னத்தில் கை வைப்பதும் தலையில் கை வைப்பதும் ஆண்களுக்கு சோகமும், பெண்களுக்கு மோகமும் ஏற்படும்.

104. ஒவ்வொரு நல்லடியார்களையும் ஒருவன் நினைக்கும்போது அச்சமயம் அவ்வடியார்களின் அம்சமுடைய வனாகவேயிருக்கிறான். ஆகையால் அந்நிமிஷங்களை அதிகப் படுத்திக்கொண்டால் அவர்களாகவே இவன் மாறி விடுகிறான்.

## பிறவி இல்லாதவர்கள்

105. ஏக்கத்தில் பாக்கி இல்லாதவனும் அறிவின் உயர்வால் தன்னை அறிந்து கொண்டவனும் இவ்விரண்டும் முடித்தவனே பிறவியில்லாதவனாவான்.

106. அறிவின் பெருக்கத்திற்கும், சரீர சம்பந்தத் திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை இது 25 வயது மேற்பட்டவனுக்கே.

107. தானும் கடவுளும் வேறாக உள்ள வரையிலும் தவம் வேண்டும். இந்நிலைக்குப் பிறவியுண்டு.

## நாமும் ஆதியும்

108. தன் மறதியில் தனித்ததும், மறதிதெளிந்து தானே விழித்ததும், தான் என்செய்வதென்று பசித்ததும், பசித்த ஏக்க வேகமே பரஞ்ஜோதியாய் விளைந்ததும், விளைந்த பரமானந்த பரவசமே அறிவாய், அழகாய், விரிந்ததும் விரிந்து பிரிந்து பரந்த அணுக்களின் வெப்பின் அமைதியே உறைந்த உலகங்களாய் இணைந்ததும் ஊன்றி ஓர் அறிவாய் வளர்ந்ததும், ஓரறிவிலிருந்தே ஐயறிவுவரையி லுள்ள ரூபாரூபங்களாய் நின்று, நகர்ந்து, ஓடி உலாவுவதும் ஐந்தறிவையும அறியும் அருமறை நெறி எல்லாம் அடக்கமும், அடங்கிய ஆறறிவுள்ள மனிதனாய்ப்பிறந்ததும், பிறந்த மகத்துவம் அறியாது மாண்டதும், மாண்டு மாண்டு மீண்டதும், தன்னைத்தான் அறிவதற்குரிய ஏக்கத்

தால் தனித்தேன், விழித்தேன், பசித்தேன், பசித்து, தனித்து, விழித்ததின் பயனே, தன்னை அறிந்து தானான தலைவனை நான் அடைந்தேன். என்னுள் அமர்ந்து என் மெய்யுணர்வை அடைந்தேன். என் பெரும்தாராதரத்தைத் தெரிந்து நானன்றி வேறொன்று இல்லை என்றறிந்த ஆனந்த பரவசத்தால் அழைத்தேன், அழைக்கின்றேன், அழைத்துத் தருகின்றேன், தன்னைத்தான் அறிவதற்குரிய தன் மெய் யுணர்வை.

...நூலகம். ★

109. ஓ துப்பாளர்களே (Dedectives) உங்களின் அறிவு போதிய வேக மிருந்தும் ஞானியாகப் பிரகாசிக்கத் தயக்கம் ஏன்?

ஓ அறிவாளியே! நீ என்னை ஜெயிக்க முற்படு நானாகவே பிரகாசிப்பாய்.

**கவனத்தில் வைக்கவேண்டிய விஷயங்கள்:—**

1. வீண் ஆடம்பரத்தைச் சுருக்கி அறிவை விருத்தி செய்துகொள்ளுவது உண்மை நிலை.
2. வெளியில் உள்ள பக்தியைவிட உள் பக்தியே சிறந்தது.
3. தேடும்வரைத் தேடிக் கிடைத்தபின் அதைப் பாது காப்பதுவே உத்தமம்.
4. தூங்குமட்டும் தூங்கினாலும் உணர்வோடு தூங்கினால் அதுவே துக்கமற்ற தூக்கமாகும்.

## சாதி மத தொழில் இராஜாங்க துவேஷம் எப்போதும் வேண்டாம்

110. தன் ஆடையைத் தான் சுத்தம் செய்து உடுத்திக்கொள்ளும்போதும், தன் முகத்தை வசீகரமாக்கிக் கொள்ள ரோமத்தை வழித்துக் கொள்ளும்போதும், தன்

மலஜல உபாதிகளை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ளும் போதும், நீ இருக்கும் இடங்களைச் சுத்தம் செய்து கொள்ளும்போதும், உன் சீர்திருத்தத் தொழில்களில் இருக்கும்போதும், நீ அறிந்த பெரும் அனுபோகத்திற்கு மாறாக நடப்பவர்க்கு எடுத்துக் காட்டிச் சொல்லித் திருத்தும்போதும், பிறர்க்கு மரியாதை, நற்சொல், நன் கொடை அளிக்கும்போதும், அறிவுக்குப் பொருத்த மில்லாதபோது உடனே ஆக்கினை, திடச் சொற்கள் சொல்லும்போதும், கருணை ஒழுக்கமாய் இருக்கும் போதும், தன்னளவில் சுயேச்சை நிம்மதியில் இருக்கும் போதும், அவ்வச் சமயா சமயங்களில் அந்தந்த தொழி லாளியாகவும் தனவந்த தர்ம அறிவாளி அரச ஆக்கினைக் குடையவனுயுமிருந்து வருகின்றாய்.

அந்தந்த தொழிலில் அதிகப்படியாக (Majorty) எடுத்து நடத்துவோரின் பெயரே; தோட்டி, ஒட்டன், நாவிதன், வண்ணான், கொத்தன், தொழிலாளி, தனவந்தன் தர்மன், கொடையாளி, அரசன், சமயாச்சாரி, தீர்க்க தரிசி, அறிவாளி, ஞானியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஓ தொழிலாளிகளே! உங்கள் தொழிலுக்கும் உங்கள் அறிவுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் இருப்பதால், தன் தொழிலை ஈனமாக நினையாது, அந்தந்த சமயா சந்தர்ப் பத்திற்கேற்ப, பரிசுத்த நடை உடையால் கலந்துகொள்ள முற்படுங்கள்.

ஓ தனவந்தர்களே! அறிவாளிகளே! இதை யறிந்து அந்தந்த தொழிலாளிகளை பெருந்தன்மையாக அழைத்தல், சேர்த்தலில் இருந்து வாருங்கள்.

அது போன்ற ஒவ்வொரு மதத்தின் நீதி, சுயேச்சை திடங்களும், ஒவ்வொரு இராஜாங்கத்தின் நோக்கங்களும், தன் சொந்த நீதி, தொழில் வேகத்தில் இருந்தே வருகிறது.

ஆகையால், அறிவின் ஆராய்ச்சியுள்ளவர்களே இதைச் சிந்தித்து ஆனந்த பரவசம் அடைவீர்கள் என்பதுடன்; வரும் 'நடந்த தெல்லாம் நன்மைக்கே' என்ற நூலில் நிர்வாக சட்டதிட்ட பகுதியைப் பார்ப்பீர்களாக.

## இராஜ்ய நிர்வாகஸ்தர்களுக்கு

111. வயிறு சுமப்பதோ சிறு உழக்கரிசி. அதற்காக சரீரம் சுமப்பதோ பல பெரும் மூட்டைகள். இதைவிட அனர்த்தமாய் தனவந்தர்கள் மனது சுமப்பதோ அநேக ஏக்கர் நிலத்துடன் வீண் வியவகார விதண்டாபாரங்கள். என் செய்வது? உடல் அனுபோகத்திற்கு உழைத்தே, சேகரித்தே, சேமித்தே வைக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஏன்? உண்மை தெரியா ராஜ்ய நிர்வாகத்தாலேயே!!

மரம் வளர்ந்து செழித்தாலோ அதனடியில் வளரும் புல், பூண்டு, செடி, கொடிகளும் செழிக்கின்றதே! அதற்குள்ள தாரதம்மியமும் இல்லையா தனவந்தர்களின் ஆட்சியில்? அறிந்தோர் எடுத்துக் காட்டியும் கேளாதிருந்தால் எல்லாம் அழிந்துபோக வேண்டுமென்று ஒரு கூப்பாடு போடுவேனேயானால் அது பலியாது போவதில்லை. ஒழிந்து அழிந்து உணர்வதைவிட அறிந்து ஆசையற்ற அறிவின் நிர்வாகத்தை உடனே பரப்ப முற்படுங்கள்.

## இச்சபையின் நிர்வாகஸ்தர்களுக்கு

112. உலகத்தை ஆளக்கூடிய இராஜ்யத்தில் நிர்வாகஸ்தர்களாய் இருப்பவர்களையும் மற்ற உயர்பதவிகளில் இருப்பவர்களையும் அவர்களுடைய எதார்த்த சட்டதிட்டங்களையும் பார்த்து லோகமக்கள் எப்படி அன்பும், நன்றியும் பாராட்டுகின்றார்களோ அதே உதாரணமாக அநேக

மடங்கு இச்சபை நிர்வாகஸ்தர்களையும், அங்கத்தினர்களை யும் காரண சூக்கும லோகத்திலும், இவ்வுலகத்திலுமுள்ள அறிவுடையோர்களும் மிகமிக நன்றி பாராட்டிக் கொண் டிருக்கிறார்கள். பிறந்த அறிவுடையோர்களும், இனி பிறக்கும் அறிவுடையோர்களும், சித்தர்களும், முத்திக் குடைய மெய்யுணர்வை உங்கள் மேல் நன்றி பாராட்டி இதோ வந்து பெற்றுக் கொள்வார்கள். இச் சந்தோஷத் திற்காகவே எல்லோரின் ஏக்கமும்.

113. இதைப் பார்க்கும்போது, உங்கள் அன்புநிலை சமத்துவத்திலும், உங்கள் மனநிலை உற்சாகத்திலும், உங் கள் அறிவுநிலை ஆராய்ச்சியிலும், தன் சுயநிலை திடசித்தத்தி லும் இருந்தே வருகிறது.

அதுவாலேயே என் சரீரம் பூரிப்பு அடைகிறேன்.

சந்தோஷம்.

Printed at the B. N. Press, Mount Road, Madras.
Q. H. Ms. 162. Sep. '46. Copies 1000

பரிபூரண

# பரஞ்சோதியின் உயர்ஞான சபை

எல்லாச் சபைகளுக்கும் குருஸ்தானம் வகிப்பவர்

**ஞானவள்ளல் பரஞ்ஜோதி மஹான்** அவர்களே.

---

தலைமை சபை — மதுரை.

நெ. 1, மேல வடம்போக்கித் தெரு.

கிளை சபை — சென்னை.

390, திருவொற்றியூர் ஹைரோட்,
தண்டையார்பேட்டை.

தொடர்பு:—குனே, பெரம்பூர், அருப்புக் கோட்டை, சின்னாளப்பட்டி, பெரியகுளம், பாம்பே, புதுவை, வேலூர், காஞ்சிபுரம், காகிநாடா, பாளையங் கோட்டை, விழுப்புரம், சேலம், திருவண்ணாமலை, பெங்களூர், திருவாரூர்.

பரஞ்சோதி மஹான் அருளிய

“ எந்நூலுக்கும் இந்நூலே மூலம் ” என்ற

உயர்ஞான நூலில்

1: ஒருமொழி.

2. பேரறிவு.

3. பரஞ்ஜோதி.

4. ஞானக்கண்.

5. ஆதியும் உலக இணைப்பும்.

6. ஆருதாரமும் அமிர்தமும்.

7. பூதலோகம்.

8. உணர்வும் தவக்கனலும்.

அச்சில் :—

1. நடந்ததெல்லாம் நன்மைக்கே.

2. சந்தோஷம்.

---

N. B.—இச்சபையின் புத்தகங்கள் ஷை சபைகளிலும், Corporation Fruit Market Stall No. 34 லும் எக்கிம்பாத்தம் புஸ்தக ஸ்டாலிலும் கிடைக்கும்.